# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

நான் ஒரு மானுடன் நான்; மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை-II  கார்த்திகை 1925  காசு-8


கலைமாணி

## ஸ்ரீ. அ. மாதவையர் அவர்கள்

பேரிற் பாடிய

# சரமகவி

### நேரிசை வெண்பா

ஆண்டு குரோதிமதி ஐப்பசியா றுந்தேதி
மாண்டகுரு வாரம்முன் னைந்திதி—வேண்டுஞ்சீர்
மூலந் தனிலாதி மூல பதமடைந்தான்
சீலநெறி மாதவன்றான் தேர்ந்து.

முன்னைந்திதி—பூர்வபக்ஷ பஞ்சமி

### கலிவெண்பா

**பா**ண்டிவள நெல்லைப் பதிசார் பெருங்குளத்தில்
ஆண்டகைய பாவய்யர் என்றுசொலும்—நீண்ட
புகழனந்த நாரணற்குப் புத்திரனாய்த் தோன்றி;

[11—8—70]

மகன்றந்தைக் காற்றும் உதவி—சகமெச்ச
ஆற்றத் துணிந்து தமிழ் ஆங்கிலமென் னுங்கடல்கள்
சாற்றற் கரியபல சாத்திரங்கள்—ஆற்றலொடு
நீந்திக் கரைசேர நெல்லை தனிற் கற்றபின்னர்
எந்தல்குரு மில்லர் இணையடியை—வாதிதலை
சென்னைச் சருவ கலாசா லையிற்றேறி
மன்னுகலை யாணியெனப் பேர்பெற்று;—மன்னர்
துரைத்தனவுத் யோகத் துறையிற் கடமை
புரைசிறிதும் இன்றிப் புரிந்து;—கரையிரண்டும்
ஓதம் ஒலிக்கும் உபர்நா டிதிற்கால
பேதத்தால் நேர்ந்த பிழைகளெல்லாம்—சேதமுறத்
தில்லைக்கோ விந்தன், திருமலை சேதுபதி,
நல்விசய மார்த்தாண்டம், நாடுபுகழ்—தொல் குசிகர்
குட்டிக் கதைகள், குணநிறைபத் மாவதியும்
இட்டமுடன் பஞ்சு வெழில்கதையும்—கட்டமிகப்
பட்டமுத்து மீனாட்சி, பாரிஸ்தர் பஞ்சநதம்,
சிட்டர்துதி ஆசாரச் சீர்திருத்தம்,—தொட்ட
புதுக்கலியா ணப்பாட்டு, தேசியகீதங்கள்,
சதுரநிறை சத்தியா னந்தன்,—பொதுத்தரும
சற்கீத மஞ்சரியும் தன்னேர் கிலாநிந்தா
நற்பல நூல்செய்து பரப்பினபின்—விற்பன்னர்
நெஞ்சங் களிக்க நிலவுமொரு பத்திரிகை
பஞ்சா மிருதம் பதிப்பித்தே—எஞ்சலிலாத்
தேவர் திருக்குறளிற் தேர்ந்தெடுத்த நானூற்றை
யாவர்க்கும் புத்துரையொன் றீந்து நவி,—எவர்முன்னும்
மெய்தன்னை மெய்யென்றும் பொய்தன்னைப் பொய்யென்றும்
செய்கைமொழி தமிழிற் தெரிவித்தே—பொய்யைக்
கடிந்ததனுற் சில்லோர் கனன்று பகைத்தும்
படிந்தமனச் சான்றின் படியே—விடியுமிரா
எல்லுதிக்கும் என்றுமபி எப்பொழுதும் வேலைசெய்து
பல்லார்க்கு முன்மா திரிகாட்டி;—இல்லறமே
நல்லறம் நல்லறம் நல்லறம் என்றெவரும்
சொல்லத்தன் வாழ்க்கைத் துணையோடு—பல்லாண்டு
வாழ்ந்து சுகித்து மகாரெண் மரையீன்று

வீழ்ந்ததன் னிலவாளுந் நாளுமாய்—ஆழ்ந்தமொழி
தக்கார் தகவிலா என்ப தவரவா
எச்சத்தார் காணப் படுமென்ற—மிக்கதிரு
வள்ளுவனார் சொன்ன திரு வாக்குக் கிலக்காகி;
கள்ளமிலா நட்பின் கரைகண்டு—கொள்ளும்
இலக்குமணபு போற்றிகள்போல் ஏதுமிலா அன்பர்
சிலரைத் தெரிந்துசினே கித்து;—நலம்பெற்ற
சென்னைச் சருவ கலாசாலைத் தொழிலைத
தன்கடமை தம்மை நிறைவேற்ற—உன்னியங்கே
சென்று கலைக்கழகச் செல்வரெலாஞ் சூழ்ந்திருக்க
நன்றுசில வார்த்தை நவின்றபின்னர்—தனது
சனத்திருந்து தன்னை மறந்துபரஞ் சோதி
தனைக்கலந்தான் சீர்மா தவன்

## கட்டளைக்கலித்துறை.

இல்லாளு மக்களும் ஏங்கிக் கலங்க இனசனர்கள்
எல்லாரும் வாட இருநிலந் தன்சுமை யால்வருந்த
நல்லார்கள் நைய நமற்கொல்லி பாதத்தை நண்ணினன்காண்
சொல்லாமல் யாருக்குந் தோன்றல்மெய்ம் மாதவத் தூயவனே:

நமற்கொல்லி—இயமனைக் கொன்றவன்

## நேரிசைவெண்பா

சடாயு புலம்பத் தசரதன்சென் றுற்போம்
புடவியிலே யான்புலம்பப் போனாய்—கடையனியான்
எப்போதும் இம்பர் இருப்பேனோ மாதவையா
தப்பாதுன் பின்வருவேன் சார்ந்து.

FRANCIS KINGSBURY.

சென்னைக் கீழ்ப்பாக்கம்,
குரோதிளு ஐப்பசிமீ ௯உ.

# சந்தாதாரர்களுக்கு

## அறிவிக்கை.

பஞ்சாமிர்தம் Vol. II. 7-ஆவது சஞ்சிகையின் கட்டுரைகளைத் தேர்ந்து தொகுத்து அச்சிடுவதற்குத் தயாராக வைத்துவிட்டு, பத்திரிகை வேலை சிரமமேயெனினும் தம் மனதுக்கிசைந்து மகிழ்ச்சி தருவது, என்று சொல்லிவிட்டு, பத்திராதிபரான என் தகப்பனார், அ. மாதவய்யர், அக்டோபர் 22, 1925-ல் திடீரென்று அநாயாச மரண மடைந்தார்.

"பஞ்சாமிர்தம்" ஆபீஸ், வேண்டிய பணமில்லாமல், வேலைக்காரர் யாருமில்லாமல், ஒரு கையால் நடத்தப்பட்டு வந்தது; அதனால் அக்டோபர் சஞ்சிகையும் பத்திராதிபருக்கு ஞாபகச் சின்னமான ஒரு சஞ்சிகையும் மட்டுமே வெளிவரும் என்று, நான் தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தேன். தீராத கஷ்டங்களும் காலதாமதங்களும் அநேகம் ஏற்பட்டு பத்திரிகைகள் வெளிவர இந்நாள் வரை சென்றது.

"பஞ்சாமிர்தம்" ஆபீஸ் புஸ்தகங்கள் இரண்டையும் சஞ்சிகைகளுடன் சேர்த்து அனுப்புகிறேன்.

பத்திரிகைகள் ஏன் வெளிவரவில்லை என்று உறுக்கிக்கேட்டு, பாக்கி சந்தா பணத்துக்காக நியாயஸ்தலம் ஏறப்போவதாக பயம் காட்டிய சந்தாதாரர்கள் சிலருக்கு நான் இவ்விடத்தில் ஒரு பதிலும் கூறவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வியும் கேளாமல் தங்கள் பொறுமையையும் அநுதாபத்தையும் வெளிப்படுத்திய சந்தாதாரர்கள் அனைவரையும், இந்த ஏற்பாட்டின் குறைகளைப் பொறுத்து என் மனமார்ந்த வந்தனங்களை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

ம. அனந்தநாராயணன்.

## உன் தாய் நாடு எது, தெரியுமா?

உன்னை உன் அன்னைதன் கைகளில் ஏந்தி
உலாவிய வீடதுவே—தினம்
உன் நெஞ்சுகந்திட நீ விளையாடு
மைதான வெளி அதுவே.
ஆதியில் நீசென்றறிவரி ஓதிய
பள்ளிக்கூடம் அதுவே—மிகு
சோதி உன் நாட்டுக்கொடி பறந்தோங்கிடும்
ஊர் அம்பலம் அதுவே.

பண்டை உன் மூதையர் மண்பெரியுண்ட
மயான வெளி அதுவே—தொலை
கொண்ட ஊர் சென்று நீ மீள்கையில் கண்டிடு
கோபுரங்கள் அதுவே.
உன்குல முன்னோர் உழுத தடம்பொலி
நன்கழனி அதுவே—மனம்
இன்களி பொங்க நீ பன்முறை ஏறிய
துங்க மலை அதுவே.

பாரில் ஓர் நாட்டினர் யாவருமே ஓர்
பெருங்குடி ஆகையினால்—பதி
னாறிரு கோடி அனைவரும பாரத
அன்னையின் ஓர் குடியே.
இந்தியை மக்கள் எல்லோர்க்கும், பரம்பரை,
இன்பு, துன்பு, ஆசை ஒன்றே—அவர்
சந்ததம் அன்னை தளரத் தளர்ந்தவள்
ஓங்குற வீங்குவரே! — அமுதகவி

---

குறிப்பு:—பிரான்ஸ் தேசத்துப் பள்ளிக்கூடங்களில் வழங்கும் பாடப் புஸ்தகத்திலிருந்து, இந்தியாவுக்கும் இந்தியருக்கும் பொருந்தும் படி, இதைத் தமிழில் அமைத்தெழுதப்பட்டது. இந்தக் காசில் காணப்படும் "இந்திய தேசியக்கல்வி"—ஏழாவது அதிகாரத்தில், இதன் மூலமொழி பெயர்ப்பைக் காணலாம். (ப—ர் ப—ம்.)

# பேரோ அக்கனதன்.

ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை.

இந்தியரின் நாகரிகத்தைப் போல எகிப்தியரின் நாகரீகமும் மிக புராதனமானது. இந்திய—ஆரியரின் நாகரிகம் ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகளாக வருவதென்றும், திராவிடரின் நாகரிகம் பத்து—பன்னீராயிரம ஆண்டுகளாக வருவதென்றும் கூறுவர். இரண்டு—மூவாயிரம ஆண்டுகளுக்குட்பட்ட பழைய நூல்களில் காணும் கூற்றுக்களே இவற்றுக்கு முக்கிய ஆதாரம்; இந்நாளிலே தென்பால் திருநெல்வேலி ஜில்லாவிலும வடபால் சிந்துப பிரதேசத்திலும் சில இடங்களைத் தோண்டிப பார்த்ததில அகப்பட்ட எலும்புகள் பாத்திரம் பண்டங்கள் கட்டடங்கள் முதலியன, இந்தியர் நாகரிகத்தின் பழைமையை உறுதிபபடுத்தி, முன்பின் பதினாயிரம ஆண்டுகளுக்கு முன்னமே இந்திய திராவிடர் நாகரிகமுற்றிருநதனா என்பதைச் சுட்டாநிற்கும். ஆயினும இவ்விஷயத்தில் காலவுறுதியும் அத்தாட்சிகளும இன்னும் துலலியமா பெறபடவில்லை. எகிப்தியரின் நாகரிக விஷயமோ, இநதன்மைத்தன்று. இற்றைக்கு எழாயிரம் வருஷங்களுக்கு முனபு தொட்டு அவாகள் நாகரீகத்தை நன்குவிளக்கும் எழுததுச சாஸனங்களும், பாத்திரம பண்டங்களும் ஏராளமாய் ஒழுங்காய்த் தலைமுறை தலைமுறையாய்க் கிடைத்துள்ளன; அக்காலத்துக்கு இரண்டு—மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகத்துக்கு எழுத்துச சாசனங்களில்லையாயினும், கிடைத்துளள பாத்திரங்கள் பண்டங்கள் ஐயப்பாட்டுக்கு இடமின்றித் துலக்குகின்றன. இந்தியாவிலோ, அசோகர் கல்வெட்டுக்கு, அஃதாவது 2300 வருஷங்களுக்கு, முந்திய எழுத்துச் சாசனமேயில்லை. இதன் முக்கிய காரணம், எகிபதியர், தமது அரசர் அரசிகள் இறந்தவா உடல்களை, காலக்கதியால் அவை சிதைவுறுவண்ணம் பதனிட்டுப பொதிந்து, அவற்றுக்கென்றே கட்டப்பட்ட பிரமாண்டமான கல்லறைகளில், பிற பண்டங்கள பாத்திரங்கள் அணிகள் தட்டு முட்டுச் சாமான்கள் எழுதது வரலாறுகளுடன், சேமித்து வைத்து வந்த வழக்கமும நெடுங்காலமாக எழுத்து அவர்களுக்குள் வழங்கி

வந்ததுமேயாம். இக்காலத்துப் புராதன சரித்திர ஆராய்ச்சிக்காரர் களின் முயற்சியால் இவ்வத்தாட்சிகள் வெளிப்பட்டு, எகிப்தியரின் பழைய நாகரிகமும் வரலாறுகளும் தெளிவாய் விவரமாய் விளங்கு கின்றன.

இவ்வண்ணம் கி. மு. 4777-ம் ஆண்டு முதல் ஒழுங்காய்த் தெரியவந்துள்ள எகிப்திய இராஜ வமிசங்களில் பதினெட்டாவது வமிசத்தைச் சேர்ந்த மூன்றாவது அமனேபிசு என்ற பேரோ கி. மு. 1411 முதல் எகிப்து ராஜ்யத்தை ஆண்டுவந்தான். அக்காலத்திலே தீபசு நகரம் எகிப்தின் இராஜதானியாயிருந்தது. சூடான் சிரியா முதலிய பல நாடுகள் எகிப்து ராஜ்யத்துக்குட்பட்டுத் திறை செலுத்தி வந்தன; எனவே, எகிப்திய அரசரான பேரோக்கள் செல்வமும் சீர்த்தியும் மிக்க சக்கரவர்த்திகளா யிலங்கினர்.

பேரோ அமனேபிசு உல்லாசப்பிரியன்; யுத்தவீரன்; வேட்டையில் தேர்ந்தவன்; பத்து வருஷங்களில் நூற்றிரண்டு சிங்கங்களைத் தான் வேட்டையாடிக் கொன்றதைப்பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்வான. அவன் பட்ட மகிஷி தீயி என்பாள், அழகிலும் அறிவிலும் சிறந்தவள். அவர்களுக்குப் பல பெண்மக்கள் பிறந்தனர்; ஆயினும் அரசுரிமைக் கோர் ஆண் மகன் பிறந்திலன். அதனால் மனம்வருந்திய பேரோ, தன் ஆட்சியின் பத்தாவது ஆண்டிலே மித்தானி அரசன் மகள் கிலுகிப்பை என்பவளை இரண்டாந்தாரமாக மணம்புரிந்துகொண்டான். ஆடம்பரமான சீர்சிறப்புக்களோடும், முந்நூற்றுப் பதினேழு தாதிப் பெண்களோடும், அவள் பேரோவின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தாள்; ஆனால் அவளுக்குக் குழந்தைகளே பிறக்கவில்லை; அரசிதீயியே பட்டமகிஷியாய் விளங்கி வந்தாள்.

இக்காலத்து இந்து மகா ஜனங்களைப போல முற்காலத்து எகிப்தியர் பல கடவுளர்களையும், பைசாசங்களையும் வணங்கி வந்தனர். அவர்கள் வழிபட்ட தெய்வங்களில் ஆண் பெண் இருபாலாரு முண்டு; நரி, கடாய், கன்று முதலிய மிருகங்களைப் போன்ற தெய்வங்களுமுண்டு. இத் தெய்வங்கள், போர்களையும் உதிரத்தையும பலிகளையும மிகவும் விரும்புவன; இவற்றுள் பெரியன சிறியன என்னும் ஏற்றத்தாழ்வுமுண்டு. நாம பேசும் காலத்திலே அமன் என்ற தெய்வமே தீபிசு ராஜதானியிலும், எகிப்து ராஜ்யத்திலும் சிறந்து விளங்கிற்று. பேரோவின் அமனேபிசு என்ற பெயரின் முதல், அத்தெய்வத்தின் பெயரே. அமனை ஆரா

திக்கும் பூசாரிகள் இராஜ்யத்திலே மிக்க செல்வாக் குடையவர்களா யிருந்தனர். ஹிந்துக்களுக்குள் போலவே எகிப்தியருக் குள்ளும் பூசாரிகள் ஒரு தனி வகுப்பினரா யிருந்தனர்.

அரசிதீபி, தனக்கொரு ஆண்மகவை வேண்டிப் பல தெய்வங் களைப் பிரார்த்தும் பயன்படவில்லை. முடிவில் அவள், ரா என்றும் ஆதன் என்றும் எகிப்தியர் கூறும் சூரியதேவனை ,வேண்டிக் கொண் டாள். ஆதன அநுக்கிரகத்தினால், முன் பின் கி. மு. 1423—ம் ஆண்டிலே அவளுக்கோரு மகன் பிறந்தான். அருந்தவப் பயனாய் இராஜ்யத்தை ஆளப்பிறந்த இம்மகனுக்கு அமன்ஹோடப் (அமனின் சாந்தி) என்று பெயரிட்டனர். ஆதித்தனது வரப்பிரசாத மான அரசிளங்குமரன் பெயரிலே அமன் கடவுளின் மேன்மையே தொனித்து விளங்கினமை, அமன்பூசாரியாரின் பெருமையையும் செல்வாக்கையும் நன்கு துலக்கும்.

பிறந்த குழந்தை பலவீனமாயும் மண்டை குரூபமாய்ப் பருத்து நீண்டும, உதிரவளமையின்றி வெளிறின மேனியோடு மிருந்தது; இம்மட்டோ, சிறுபிராயத்திலேயே காக்கை வலிப்பு நோயும் தேவா வேசமும் அடிக்கடி காணலாயின; ஆனால் ஆரோக்கிய திடகாத்திர மில்லையாயினும், பாலியத்திலேயே விளங்கின அபரிமிதமான மூளை வலியும் ஆலோசனை சக்தியும மாத்திரம் அப்பொழுதே அனைவருக் கும் ஆச்சரியத்தை விளைத்தன. அரசிளங்குமரனுக்கு வயது பன் னிரண்டாகு முன் முதற்கண் மித்தானி அரசன் மகளை மணம்புரி வித்தனர்; அவள் சின்னாளில் மாண்டொழிய ஆயி என்ற எகிப்தியப் பிரபுவின் மகள் நிவர்த்திதி என்ற பேரழகியை விவாகஞ் செய்தனர். இதற்குப் பின் தந்தையாகிய பேரோ மூன்றும் அமனோபீசு காலஞ் செல்ல அரசிளங்குமரன் அமன்ஹோடப் தன் பதின்மூன்றாவது பிராயத்திலே நிவர்த்திதி யரசியோடும் பட்டத்துக்கு வந்தான். அவன் இளமை காரணமாக தீபிராணியே அவன் பெயரால் இராஜ்ய பரிபாலனம் செய்துவந்தாள். எகிப்திய பேரோக்கள் பட்டத்துக்கு வந்து சிம்மாசனமேறும்போது, புதுப் பெயர்களும் பட்டங்களும் வைத்துக்கொள்வது வழக்கம. அவ்வாறு அமன்ஹோடப் புதிதா யிட்டுக்கொண்ட பெயர்களில் சூரிய புத்திரன் என்பதொன்று.

வெளிறிமெலிந்த மேனியும், சரீர ஆகிருதிக் கேற்றவாறின்றிப் பருத்து நீண்ட தலையும விசாலமான நெற்றியும கனத்து விழும இமைகளும், சருவதா கனவுகளில் ஆழ்ந்தன போன்ற கண்களும் நீண்டுரும்பிய கழுத்தும் வாய்ந்து என்றுமே பலவீனனாய் அடிக்கடி

நோயால் வருந்திய இவ்வரசன் ஸ்தூல சரீரத்தின் மீது ஆத்மசக்திக்குள்ள பேராதிக்கத்துக்கு, ஓர் இலக்கியம்போல் இலங்கினான். இவன் சிந்தனைகளெல்லாம், இளமைப் பருவம் முதலே, இவன் காலத்துக்கும் அக்காலத்துக் கோட்பாடுகள் நம்பிக்கைகளுக்கும் எவ்வளவோ மேற்பட்டனவாயிருந்தன. சிற்பத்திலும் ஓவியத்திலும புதிய முறைகளையும் வழிகளையும் ஏற்படுத்தி, அக்கலைகள், இயற்கைக்கு விரோதமான பழைய வகைகளையே பற்றிச்சென்று பாழுறாமல், இயற்கையோடொத்து இளங்கும்படி செய்தான். இவனுக்கும் அரசிநிவர்த்திதிக்கும் ஏழு பெண்மக்கள் காலக்கிரமத்தில் பிறந்தனர். இவன் காலத்து சித்திரங்களிலே, இவன், தன் மனைவி மக்களோடு வெளியே சவாரி போவதையும், தோட்டங்களில் உலாவிக் களிப்பதையும, கோயில்களில் தொழுவதையும், அரண்மனையில் உண்டு களிப்பதையும், தினசரி நடபடிக்கைகளை யெல்லாம் உள்ளன உள்ளபடி, இயற்கை விரோதமின்றி, அரசனென்று கூட்டிக்குறையாமல், யதார்த்தமாய் வரைந்திருப்பதைக் காணலாம். முடி மன்னராயினும் குடிமக்களாயினும், "காதலிருவர் கருத்தொத்த ஆதரவு பட்டதே இன்பம்", அதுவே இல்லற தருமத்தின் அடிப்படை என்பதைத் தன் வாழ்க்கையிலே நிதரிசனமாகக் காட்டி, இவ்வரசன், தன் மனைவிமக்கள்மீது அன்புமிக்கவனாய், எப்பொழுதும் அவருடன் காலங்கழித்து, தன் குடிகள் எல்லோரும் தம்மரசனது இல்வாழ்க்கையைச் சாதாரணமாய்க் கண்டு மகிழ்ந்து, தாமும் அவ்வாறே வாழ முயலும்படி தூண்டினன். இவை யாவற்றினும் மேலாக, உலகத்துக்கெல்லாம் ஒரு சிறந்த நன்மாதிரியாகி, இற்றைக்கு 33 நூற்றாண்டுகளுக்குமுன் மதவிஷயத்தில் இவன் செய்த சீர்திருத்தமும, கைப்பற்றித் தன்னுயிரன்ற மட்டும் பரவச்செய்த கோட்பாடுகளும், இவன் சரிதத்தைப் படிப்பார் மனத்தில் ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் விளைப்பதால், இனி அவற்றை எடுத்துக் கூறுவேன். மனிதர்களைப்போலவே ஆசாபாசங்களுக்கும் கோபதாபங்களுக்கும உட்பட்ட பல கடவுளர்களையும் பைசாசங்களையும் ஆதி எகிப்தியர் ஆராதனை செய்து வந்தனரென்றும்; அக்கடவுளர்க்குள் அமன் என்னும் தெய்வமும், அமன் பூசாரிகளுமே நாட்டிலே ச்ரேஷ்டமுற்றுத் திகழ்ந்தனரென்றும, ரா அல்லது ஆதன் என்ற சூரியனும் அக்கடவுளரில் ஒருவனென்றும், மேலே கூறிவானேன். இவ்வரசன் இளமைதொட்டே உலகப்படைப்பையும் இயற்கையையும்பற்றி ஆழ்ந்து ஆலோசனை செய்துவாததன்பலனக, உலகங்கட்கெலாம் ஒரு தனி விழியாகி அலகில் அண்டங்களை, ஆச்சி

யளப்பவன் சூரிய பகவானே என்பதையும்; அக்கடவுள் அன்புருக் கொண்டவன், ஆனந்த மயமானவன் என்பதையும் உணர்ந்து, எகிப் தியருக்குள் சூரியனுக்கு வழங்கிவந்த நாமத்தை முதலில் "சூரிய னின் உஷ்ண சக்தி" என்றும், அப்பால், "சூரிய ஜோதி" என்று மாற்றி, மறறெல்லாத் தெய்வங்களின் ஆராதனையையும் ஒடுக்கி யொழிக்க முயன்று, 'கடவுள் ஒருவரே; அவர் ஆனந்த மயமானவர்; மக்களிடத்திலும் புல பூண்டுகள் உட்பட மற்றெல்லாச் சிருஷ்டிகள் இடத்தும் அன்பும் இரக்கமும் உள்ளவர்; அவற்றின் மகிழ்ச்சியைக் கண்டுதான் மகிழ்பவர்; இருண்ட பயங்கரமான கோயில்களையும் பலி களையும் விட்டு, பிரகாசமான வெளியிலே புஷ்பலாதிகளால் பக்தி யோடும் அன்போடும் அவரை ஆராதனை செய்தலே பொருந்தும்" என்ற சிறந்த நீதிகளைப் போதிக்கலானான். இம்மட்டோ, எதிரிகள் நாடுகளிலே உதிர ஆறுகளைப் பெருக்கெடுக்கச் செய்து பிணக்குன் றுகளைக் குவித்த யுத்த வீரர்களின் வழித் தோன்றலாயின. இவ்வர சிளஞ்சிங்கம், யுத்தம் செய்து மனிதரைக் கொல்வது கொடிய பாவ மென்று கைவிட்டு, தன் பூமிகளின்மீது பிறநாட்டார் படையெடுத்து வந்த காலத்திலும தான் போராடாது பொறுமைசெய்து, உயிர்களை வதைப்பதினும் தன்னுடைமை இழந்துவிடுவதே மேலென்று சாதித்து, அவ்வண்ணமே யொழுகினன். இவ்வண்ணம் இவன் செய் தது, கௌதம புத்தருக்கு எட்டு நூற்றாண்டுகளுக்கும், அசோக ருக்குப் பதினொறு நூற்றாண்டுகளுக்கும், கிறிஸ்துவுக்குப் பதினொரு நூற்றாண்டுகளுக்கும், முந்திய காலத்திலே என்பதை ஆலோசித்துப் பார்த்தால், இவனது அருமை பெருமை நன்கு விளங்காநிற்கும்.

தான் பட்டத்துக்கு வந்த ஆறும் ஆண்டிலே, இவ்வரசன் தன் பெயரை முழுதும் மாற்றி, அக்கனுதன், அதாவது, 'ஆதன் (சூரியன்) திருப்தியடைந்தான்' என்று வைத்துக்கொண்டான். அன் றியும், தன் பெண்களுக்கெல்லாம், அமன் என்ற பெயரை நீக்கி, ஆதன் என்ற பெயரே விளங்கும்படி நாமகரணஞ் செய்யலானான். அமன் தேவனது முக்கிய க்ஷேத்திரமான தீபீசு நகரத்திலே, அமன் பூசாரிகளின் மத்தியிலே வாழ்ந்து வருமட்டும் தன் காரியம் சித்தி பெறுமதென்றறிந்து, தீபீசு நகரத்தைவிட்டு நீங்கி, நீலநதிக்கரை யிலே, நதியின் நடுவே இலங்கையும், கரைக்கப்பால் கோட்டை போல் வளர்ந்த மலைகளுமுள்ள ஏகாந்தமான பிரதேசத்திலே, புதி தாக ஒரு பெரிய நகரத்தைக்கட்டி, அதையே ராஜதானியாக்கி, அவ் விடத்தில் வாழ்ந்துவந்தான். அரமனைகளும், பிரபுக்களின் மாளிகை

களும், ஆதன் கோயில்களும், பூங்காவனங்கள் காட்சி சாலைகளும், குடிகளின் வீடுகளும் அழகாய் மலிந்து செறிந்து, 'ஆதன் வளாமம்' என்ற அந்நகரம் விளங்கிற்று. ஒருவர்பின் ஒருவராகத் தனக்குப் பிறந்த ஏழு பெண்மக்களோடும், தன் பிரிய மனைவி நிவாத்திதியோடும், தன் புதிய மதத்தைத் தழுவிய பிரபுக்கள் பிரஜைகளோடும், பேரோ அக்கநாதன், அந்நகரத்திலிருந்து இராஜ்ய பரிபாலனம் செய்து, ஆதன் மதம் தலையெடுத்துத் தழைக்கவும் பிறசமயங்களெல்லாம் அடங்கியொழியவும் அநுகூலமான கட்டளை விளம்பிறப் பித்து, மதப் பிரசாரஞ் செய்துவந்தான். அந்நகரத்தை யடுத்த மலையிலே, உரியகாலத்தில் தன்னையும் தன் மனைவியையும் அடக்கம் செய்தற்கேற்ற கல்லறைகளைத் தோண்டிக் கட்டுவித்தான். தன் மகன் இவ்வண்ணம் ஸ்தாபித்த ராஜதானியின் சிறப்பையும் அழகையும், அதில் நடைபெறும் ஆதன்விழாக்கள் ஆராதனைகள் முதலிய வைபவங்களையும் கண்டு களிக்குமாறு, தீயிராணியும் சிலகாலம் அங்கு வந்து தங்கலானாள்.

பேரோ அக்கநாதன், தான் வழிபட்ட ஆதன் கடவுளைப் பல பாக்களில் தோத்திரஞ் செய்திருக்கிறான். அவற்றில் சில பாகங்களை மொழி பெயர்த்தல் பொருந்தும்:—

“நீயே உன் சிருஷ்டிகளுக்கெல்லாம் தந்தையும் தாயுமாகின்றாய். ஆட்டுக்குட்டிகள் துள்ளிக்குதித்து விளையாடுவதும் பறவைகள்பறந்து திரிவதும் உனது ஆனந்த சக்தியினால்தான். கருணாசாகரமாகிய நீ, அளவிறந்த கோடி மன்னுயிர்களை உன் இரக்கத்தினால் காத்தளிக்கின்றனை. நீ அருட்செல்வன்: உன் அருட்கிரணங்கள் உலகெங்கும் பிரகாசித்து, அன்பின் வயப்படுத்துகின்றன. உன் அருள் மிகப் பெரிது; எல்லை வரம்பற்றது. புஷ்பங்களெல்லாம் உன் அருளினால் மலர்கின்றன ; உன் உஷ்ணமே மலர்களின் ஜீவாதாரம். உனது ஜீவ சக்தியினால்தான் ஆடுமாடுகள் சஞ்சாரஞ்செய்கின்றன; பக்ஷிகள் உல்லாசமாய்ப் பறந்து லாவுகின்றன. முட்டைக்குள் கத்தும் கோழிக் குஞ்சுக்கு நீயே தாரகம். உன் ஜீவசக்தியினால் பக்ஷிகளும் மிருகங்களும் விளையாடுவதைக் கண்டு நீ ஆனந்தமடைகின்றாய். நீ உதய காலத்தில் உயிர் அளிக்கின்றாய்; உன்ஜோதியினால் எகிப்தை அழகு செய்கின்றாய். உன் அஸ்தமனம் அழகுமயமானது. பலநாடுகளும் உதய அஸ்தமன காலங்களில் உன் அழகிலே ஈடுபட்டு, உன்னைத் தொழுகின்றன. ஆதன் உதயமானால் உலகெலாம் ஆனந்தமே. அவன் கிரணங்களே சிருஷ்டிகளின் கண்கள். 'ஆதன் தரிசனமே உயிர்; அவனைக் காணாவிடின் மரணமே' என்று மனிதர் உன்னை வாழ்த்துகின்றனர். ஆதன் அழகினாலும் ஜோதியினாலும் தான், நமது

கண்கள் பார்வையையும், ஹிருதயங்கள் ஆரோக்கியத்தையும், பெறுகின்றன. சகல சௌபாக்கியங்களுக்கும் ஐசுவரிய வளமைகளுக்கும் ஆதனே மூலகாரணன். ஆதனே நித்திய சாக்ஷி; நித்தியத்தை நிலைப்பூட்டுவோன்; அவனே விதி; அதிர்ஷ்டதாதன்; ஜீவமூலம்; அவனன்றி வேறொன்றுமில்லை; அவன் ஏகன்; ஆனால் அவனிடமிருந்து எண்ணிறந்த ஜீவகோடிகளும் சிருஷ்டிகளும் உதிக்கின்றன. ஆதன் சமாதானத்தை விரும்புவோன்; யுத்தத்தை வெறுப்பவன்; உதிரத்தில் பிரியமில்லாதவன். ஆதன் சத்திய சந்தன்; பொய்களை வெறுப்பவன்”

கோபமும் பகைமையும் பொறாமையும் பழிவாங்கும் விருப்பமும் குரூரமுமே குடிகொண்ட நெஞ்சத்தினரான யூதர்களின் கடவுள் ஜிஹோவாவுக்கும் ஆதனுக்குமுள்ள வித்தியாசங்களைக் கவனித்தால், அக்கனாதனது பெருமை விளங்கும். அக்கனாதனின் மதத்தில், நரகவேதனை, தண்டனைகள் என்ற பேச்சேயில்லை; அருளும் ஆனந்தமும் ஆரோக்கியமுமே வியாபித்திருக்கின்றன. இவ்வண்ணம் உத்தமமான தெய்வ பக்தியிலே ஈடுபட்டு, அருள் தாகங் கொண்டு, பரம பரிசுத்தனாய் வாழ்ந்துவந்த அக்கனாதனின் அரசாட்சிக் காலத்தின் கடையிரண்டுகளிலே, அவனுடைய மேலான கொள்கைகளும் ஒழுக்கமும் சோதனைக்குள்ளாயின. பேரோவினது சாந்தத்தையும் தெய்வ பக்தியையும் போர் வெறுப்பையும் பூதத்தையும் கண்ட சிற்றரசர் சிலரும், ஆதன் தவிர மற்றத் தெய்வங்களின் ஆராதனைகளை அவன் அடக்கி யொடுக்கியதால் கோபமும் வெறுப்பும் கொண்ட குடிகளும் பூசாரிகளும், சிரியா சூடான் முதலிய பிரதேசங்களில் கலகஞ் செய்தெழுந்தனர். அந்தப் பிரதேசங்களிலேயுள்ள உண்மைத் தொண்டர்களும் உத்தியோகஸ்தர்களும், சைனியங்களை யனுப்பியுதவிக் கலகங்களை யடக்குமாறு, பேரோவை வேண்டினர்; ஆள்மேல் ஆள் அனுப்பி முறையிட்டு, புராதனமான இராஜ்யம் சீர் குலைந்து, அதைச் சேர்ந்த நாடுகள் அன்னியர் கைவசமாய் விடுகின்றன வென்று பரிதபித்து, விண்ணப்பஞ் செய்தனர். ஆனால், இகலோக சாம்ராஜ்யத்தின் பொருட்டுப் போர் செய்து மனிதரைக் கொல்லுதல் கடவுள் ஒப்பாதது, வெறுப்பது, என்று மனப்பூர்வமாய் நம்பி, கடவுளைக் கருணாசாகரமாக, ஆனந்த மூர்த்தியாகப் பாவித்து வழிபட்டு வந்த அக்கனாதன், சமாதானம் செய்யும்படி அவர்களுக்குப் பதிலனுப்பியதன்றி, அவர்கள் உதவிக்கென்று படைகள் அனுப்பவுமில்லை, போருக்குப் புறப்படவுமில்லை; தன் மனச் சாக்ஷிக்கும், தான் வழிபடு கடவுளின் ஆக்ஞைக்கும் மாறுகப்

போர்புரிவதைவிட, தன் இராச்சியத்தில் சில பாகங்களை இழந்து விடுதலே நலமென மதித்தொழுகினான்; அவ்வாறே இழக்கவும் நேர்ந்தது. இதனால் இவ்வரசனது மனம் உள்ளூர எவ்வளவு வருந்திப் பரிதபித்ததோ, யாவரே அறிவார்! அக்கனாதனுக்கும் நிவர்த்திதிக்கும் பெண்கள் எழுவர் பிறந்தாராயினும், ஆண் குழந்தை பிறக்கவேயில்லை. நோயும் கவலைகளுமாக வருந்தித் தன் முப்பதாவது ஆண்டிலேயே மரணத்தை எதிர்பார்த்த அக்கனாதன், தனது நண்பனான சுமங்கரன் என்ற பிரபுவுக்குத் தன் மூத்த மகள் மரித்தாதன் என்பவளை மணம்புரிவித்து, அவனைத் தன் வாரிசாக்கிக் கொண்டான். அடுத்த ஆண்டிலே, அக்கனாதன் தேகவியோகமானான். வழக்கம்போல அவன் சவத்தைப் பதனிட்டுப் பொதிந்து பெட்டியில் வைத்துக் கல்லறையில் அடக்கஞ்செய்தனர். அக்கனாதன்இயற்றிய பின்வரும் தேவகீதம் அப்பெட்டியின்மீது வரையப்பட்டது.

"ஆதனே! உன் வாயினின்றும் வெளிப்படும் இனிய ஆவியையே நான் சுவாசிக்கிறேன். உன் அழகை நாள்தோறும் காணுகிறேன். உன் இனிய குரலைக் காதாரக் கேட்கவும், (அதுவே வடகாற்றாகும்) உன் அருளினால் என் அங்கங்கள் புத்துயிரையுடையவும், நான் விரும்புகிறேன். உன் ஆவியினால் உஜ்ஜீவிக்குமாறு எனக்குக் கைகொடுத்துதவுவாயாக! நித்தியத்தில் வாழும்படி என் பெயரால் என்னை நீ அழைக்கும்போது, நான் வரத் தவறமாட்டேன்."

. . .

அக்கனாதனுக்குப் பின் ஒருவருஷ காலமே அவன் மூத்தமாப்பிள்ளை சுமங்கரன் பேரோவாயிருந்தான். அப்பால் அவனுடைய இரண்டாவது மருமகன் பேரோவாகி, ஆதன்வளாக நகரத்தை நீங்கித் தீபைசெல்ல, அந்நகரமே மீண்டும் ராஜதானியாயிற்று. பழைய கடவுளர்களும் மதாசாரங்களும் மீண்டும் தலைநிமிர்ந்து தழைத்தோங்க, அக்கனாதன் ஸ்தாபித்த அருட்சமயமும் ஆதன்வளாக நகரமும் அழிந்துபோயின. அடுத்த பேரோவின்காலத்திலே பல யுத்தங்கள் நிகழ்ந்து, பறிபோன நாடுகள் மீட்கப்பட்டு, எகிப்து ராஜ்யம் மீண்டும் யுத்த பராக்கிரமத்தில் உயர்ந்து விளங்கிற்று. அக்கனாதன் இறந்து நாற்பதாண்டுகளுக்குள், அமன் பூசாரியார் தமது பழைய ஆதிக்கத்தைப் பெற்று, அக்கனாதனை ஒரு பதிதனாகச் சபித்து, அவன் பெயர் எங்கெங்கே பொறிக்கப்பட்டிருப்பினும் அதை அழித்துவிடும்படி பிறப்பித்த உத்திரவு, ஒருவாறு நிறைவேற்றப்பட்டது. அக்காலத்திலே வனாந்தரமாகிப் புதையுண்ட ஆதன் வளாக நகரமும் மீண்டும் இக்காலத்திலே 33 நூற்றாண்டு

களுக்குப் பின் தோண்டி யாராயப்பட்டு, அக்கனுதனது அருமை பெருமை வாய்ந்த அற்புத சரித்திரம் வெளிவந்திருக்கின்றது. அமன் பூசாரிகள் இயற்றிய கொடுமைகளால் அக்காரதனது சேமிக்கப்பட்ட சரீரம் சிதைவுற்றழிந்து, எலும்புகள் மாத்திரமே அகப்பட்டுள்ளன ஆயினும், அவன் ஆத்மா ஆனந்த மயமாயிருப்பதில் ஐயமில்லை.

"அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை, இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்."

# பத்திராதிபர் சுற்றுப்பிரயாணம்.

(434-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இரண்டு வாரம் மைசூரில் தங்கியபின், பெங்களூர் மார்க்கமாக, பம்பாய்க்குப் போனேன். வழியிலே ஒருநாள் தாருவாடா (Dharwar) வில் தங்கினேன். அவ்வூரும் கருநாடக பிராந்தியத்தைச் சேர்ந்ததுதான்; அதற்கப்புறமே, மகாராஷ்டிரம் தொடங்குகிறது. தாருவாடாவின் ஒருபாகம் குன்றின்மேல் இருக்கிறதென்னலாம். மேடு பள்ளங்கள் அதிகம்; எங்கே பார்த்தாலும் மரமும் செடியும் புல்லும் புதருமாக, ஒரே பச்சை. மேய்ச்சல் வளத்தினால், அவ்வூர் எருமைகள் சிறிய யானைகளைப்போல் காண்கின்றன. குறுணிப பால் கறக்குமாம். ஆண்கள் பெண்களும், திரட்சியிலும் உருட்சியிலும் நீட்சியிலும் செழித்துத் திகழ்கின்றார்கள். நான் தங்கினதினம் வாரச்சந்தை (செவ்வாய்க்கிழமை) யாதலால், அதையும் போய்ப் பார்த்தேன். மைசூர் இராஜ்யத்தில்போல, இங்கும், இன்னும் முழுக்கல்லுருள் மரவுருள் வண்டிகளைக் காணலாம். கண்ட காட்சிகள் சில, நாம்வாழும் நூற்றாண்டை மறக்கச்செய்ய வல்லன. இவ்வூரிலுள்ள காலேஜைப் போய்ப் பார்த்தபோது, மேல்மாடி கீழ்மாடிகளின் விளிம்பின் உட்புறத்திலிருந்து, பெரிய பெரிய தேன்கூடுகள், தொங்குவதைக் கண்டேன். நான் விசாரித்த மட்டில், தாருவாடா, "பேடா" என்னும் ஒருவகைத் "திரட்டும் பால்" பக்ஷணத்துக்

தைத்தான் பேர்போனதென்று அறிந்தேன்! அவ்வூர் எருமைப் பாலின் விசேஷம்போலும் அது.

மறுநாள் அவ்வூர்விட்டுப் பூனாவுக்குப் போனேன். ரெயில் மார்க்கத்தில், தாருவாடாவுக்கப்பால் காணும மலைக்காட்சி, மிக்க அழகுள்ளது; அடிக்கடி மலை யருவிகளையும் பச்சப்பசம் பள்ளத் தாக்குகளையும் தேக்கம் சோலைகளையும் இருபுறமும காணலாம்; 28 மலைட் 'டன்னல்'களுக்கு ஊடே ரெயில் போகின்றது. வியாழக்கிழமை காலை பூனாவை அடைந்தேன்.

பழைய பூனா நகரம் எவ்வளவு அழுக்குப் பிடித்து நெருங்கி அசங்கியமாயிருக்கிறதோ, அவ்வளவு சுத்தமாய் விசாலமாய் மனோ ஹரமாயிருக்கிறது பூனா கன்டோன்மென்ட். எலக்டிரிக் வெளிச்சங்க ளும் நல்ல ரோடும் எங்கே முடிகிறதோ, அதுவே கன்டோன் மென்டின் முடிவெல்லை, பழமபூனாவின் ஆரம்பம் என்கலாம். இவ்வ ளவு சிறந்த கன்டோன்மென்டினும், 'பூனா ரேஸ் கோர்ஸ்' (குதி ரைப பந்தய வெளி) மிகச சிறந்ததாகும். பூனாவில் நான் தங்கினது "இந்திய ஊழியர் சங்க" விடுதியில். சங்கத் தலைவர், எனது நண்பர் கௌரவ பூரண ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார், அச்சமயம் அங்கில்லை. என் முதல் உத்தேசத்தை மாற்றி, இரண்டு நாள் கழித்து நான் போன தால், அவரைக் காணக்கூடவில்லை. சங்கத்தின் வசதியான கட்டடங் கள் இருக்குமிடம், பழைய பூனாவுக்கு வெளியே, ஒரு குன்றின் அடி வாரத்திலே, மனோரம்மியமான இடம். சரித்திரமும் செல்வூனூ லும் சம்பந்தப்பட்ட மட்டில், இச்சங்கத்தின் புஸ்தகசாலைக்குச் சமமா னது இந்தியாவிலே வேறெங்கும் இல்லை என்னலாம். நான் போயிருந்தபோது, பம்பாய்ச் சட்டசபை பூனாவில் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், அதன் உபதலைவர் கனம் பலஜானி, கனம் R. G. ப்ரதான் முதலியோர் சிலர், சங்கவிடுதிகளில் தங்கியிருந்தனர். கனம் ப்ரதான் மூலமாகச் சீட்டுப்பெற்று, சட்டசபை நடவடிக்கை களைப் போய்ப்பார்த்தேன். அந்தச் சமயத்தில், பம்பாய் மாகாணக் கவர்னரையும் காண நேர்ந்தது. சட்டசபை மெம்பர்களில் சிலர் உடுத்தியிருந்த உடையும், சோடு சப்பாத்து அணிந்த பாதங்களைத் தூக்கி மேஜையின்மேல் அலக்ஷியமாய் நீட்டிச் சாய்ந்திருந்த தோர ணையும், இரண்டொருவர் கண்மூடி நிஷ்டையிலிருந்த நிலைமையும், சட்டசபையின் கௌரவத்தை உயர்த்திக் காட்டியதாகக் கூற ஒண் ணாது. சென்னையிற் போலவே அங்கும், சர்க்காரின் விருப்பமே சட்டமாகத்தான் நடந்துவந்தது. பிற்பகல் சிற்றுண்டிக்காகச் சட்ட,

சபை கலைந்தபோது, அதிகார வர்க்கத்துத் துரைமாரும் "குடி-
களின் பிரதிநிதிகள்" என்றுலவும் மெம்பர்களும், மழையினால்
வெளிசெல்ல முடியாதவர்கள், அங்கங்கே கூடிப்பேசி நின்றதைக்
கவனித்தேன். அப்பொழுது துரைகளுக்கு இந்தியர் பாலுள்ள அல
க்ஷியமும், நம்மவர்கள் துரைகளிடம் "காக்காய்பிடிக்கும்" சிரத்தை
யும், சென்னையில் வேறு பம்பாயில்வேறு என்றில்லை என்பது, துலங்
கிற்று. ஆகாத கனவு கண்டால் ஆரோடும் சொல்லலாகாது. அத
னால் இந்த விஷயத்தைப்பற்றி அதிகம் எழுத மனமில்லை. பூனாவி
லுள்ள இயற்கைக் காட்சிகளில், "பார்வதி குன்று"ம், "பண்ட்
கார்டன்ஸ்" என்னும் ஆற்றங்கரைப் பூந்தோட்டமும் அழகுமிக்கன.
இந்தியாவிலே மற்றெங்கும் காணமுடியாத இருவகை வித்தியாபீடங்
களைப் பூனாநகரத்திற் காணலாம். இவற்றில் ஒன்று "பெர்கூஸன்
காலேஜ்". இக்கல்லூரியின் விசேஷம் என்னவெனில், இதன் ஆசிரி
யர்கள், மிகச் சிறந்த மேதாவிகளாய்ப் பிறவிடங்களில் பெருந்
தொகையான சம்பளத்தைப் பெறக்கூடியவர்களாய் இருப்பினும்,
மிகக் குறைந்த ஊதியத்தையே பெற்று உத்தம தேசபக்தியுடன்
இதில் உழைத்து வருகின்றனர். இக்காலத்து இந்தியப் பெரியோர்
களுள் சிறந்து விளங்கியவரும், "இந்திய ஊழியர் சங்க" ஸ்தாபகரு
மான காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோக்கலே, இவ்வண்
ணம் இந்தக் கலாசாலையிலே பலவாண்டுகள் ஆசிரியரா யுழைத்
தவர். இக்கல்லூரியிலே படித்துத் தேர்ந்து, கணித சாஸ்திரப்
பட்டங்களில் சிறந்த "கேம்பிரிட்ஜ் ஸீனியர் ராங்க்லர்"பட்டம்
பெற்ற Dr. பரஞ்ஜ்பையும், பம்பாய் மாகாணக் கல்வியிலாகா மந்தி
ரிப் பதவியடையும்வரை, இதில் ஆசிரியராக வேலை பார்த்துவந்தார்.
இந்தியர்களால் நடத்தப்பெறும் இந்தக் கலாசாலை, படிப்புத் திற
மைக்குப் பேர்போனது. பல சிறந்த பண்டிதர்கள் சொற்பச் சம்ப
ளத்துக்கு இதில் பாடுபட்டு வருகின்றனர். இக்கலாசாலையும், அதைச்
சார்ந்த மாணவர் விடுதிகளும், இந்தியர் ஊழியச் சங்கத்தை அடுத்
துள்ளன.

இதே முன்மாதிரியாக, தேசத்தொண்டுக்காகச் சிறந்த மேணீத
யாகள் சொற்ப ஊழியத்துக்கு உழைப்பதென்று, சில வாண்டு
களுக்குமுன் திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் M. A. பட்டதாரி
கள், ஐந்து பிராமண வாலிபர், உழைக்க ஆரம்பித்ததும்; சில கார
ணங்களால் அம்முயற்சி பிஞ்சில் வெம்பிய பழமானதும்; அப்பால்
அவ் வாசிரியர்கள் வேறு புகலின்றிச் சிலநாள் வாளா விருந்ததும்,

தமிழ் மக்கள் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். மகாராஷ்டிரருக்கும் இக்காலத்துத் தமிழ் மக்களுக்கும் ஊக்கம், விடாமுயற்சி, ஒத்துழைப்பு, பரஸ்பர நம்பிக்கை முதலிய குணங்களிலுள்ள வேற்றுமைக்கு, இதுவோர் உதாரணமாகும்.

பூனாவிற்குச் சிறப்பாய்ச் சொன்ன மற்றொன்று, ஆசாரிய கார்வேயின் அனாதபாலிகாசிரமமும், பெண்கள் சர்வ கலாசாலையுமாம். இம்முயற்சி மஹாராஷ்டிரரின் ஊக்கத்தையும் முற்போக்கையும் நன்கு விளக்குவதாலும், வேறெங்குமே இந்தியாவில் பெண்கள் யூனிவெர்ஸிற்றி இல்லாமையாலும் இதைப்பற்றிச் சிறிது விஸ்தாரமாய்க் கூறுவேன்.

ஆசாரிய கார்வே ஓர் ஏழைப்பிராமணர். தன் 27-வது வயதிலே பி. ஏ.-பரீக்ஷையில் தேறி, அப்பால ஏழாண்டுகள் பம்பாய் நகரத்திலே ஒரு பெண்பிள்ளைகள் ஹைஸ்கூலில் கணக்கு வாத்தியாராக உழைத்து வந்தார். அப்பொழுது, ஐரோப்பியர்களும பார்ஸிகளும் தங்கள் ஸ்திரீகளைப் படிப்பிப்பதைக் கண்டு, ஹிந்துப்பெண்களையும் நன்கு படிப்பிக்க முயலவேண்டும் என்ற அவா, அவர் மனத்தில் உண்டாயிற்று. கார்வேயும் கோக்கலேயும் சகபாடிகள், பூனா பெர்கூஸன் காலேஜில் கணக்கு உபாத்தியார் வேலை காலியாகவே, கோக்கலே, இவரை அந்த வேலைக்கு அழைத்தார். அதனால், 1891-ம் வருஷத்திலே, தன் 34-வது வயதிலே, கார்வே பூனா சென்றார். அப்பால், கார்வேயின் மனைவி இறந்துபோனாள். வைதிகப்பற்றுள்ள அவர் தாயாரும் தமையனாரும் அவரைப் புனர் விவாகம் செய்து கொள்ள வேண்டினர். 34-வயதான கார்வேக்கு, ஒரு சிறுபெண்ணைக் கைப்பிடிக்க இஷ்டமில்லை. தன் வயதுக்குப் பொருந்திய ஒரு ஸ்திரீயையே அவர் மணக்க விரும்பினார். பிராமணரின் ஆசாரப்படி, அப்படிப்பட்டவள், விதவையன்றி, விவாகமாகாத கன்னிகையாயிருக்க முடியாது. கடைசியில், கார்வேயின் மனவுறுதியைக் கண்டு தாயும் தமையனும் விட்டுக்கொடுக்க, 9-3-1893 அன்று கார்வே ஒருவிதவையைமணம் புரிந்துகொண்டார். பூனாவோ, வைதிகக்கோஷ்டியின் கோட்டை போன்ற ஊர். அப்படிப்பட்ட இடத்திலே, 32 ஆண்டுகளுக்கு முன்பு, ஓர் ஏழைப்பிராமண உபாத்தியாயர், பிராமண சமூகத்தையே எதிர்த்து, விதவா விவாகம் செய்வதென்றால், எளிதன்று. அச்செயலே, கார்வேயின் மனோதீரத்தை நன்குவிளக்கும். அது முதற்கொண்டு தான், கார்வே விதவாவிவாகத் துறையிலும், பெண் கல்வித் துறையிலும் உழைக்க

ளானார். கார்வேயின் மருமகள், அவருடன் இருந்தாள். முதலில், அவளைப் படிப்பிக்கத் தொடங்கினார். அவள் படித்து, உபாத்திச்சிப் பரீக்ஷையிலும் தேறினாள். தெய்வ சோதனைபோல, அவள் கணவன் இறந்தான். உபாத்தினியாகச் சில ஆண்டுகள் உழைத்தபிறகு, கார்வேயின் தூண்டுதலினால், அவருடன் ஆசிரியரா யிருந்த பட்டே என்பவரை, அவள் புனர்விவாகஞ் செய்து கொண்டாள்.

அதன் பிறகு, கார்வே, 'விதவா விவாக சங்கம்' ஒன்றை ஸ்தாபித்து, அந்த விஷயத்தில் அநுதாபமுள்ள சில துணைவருடன், அதன் பொருட்டு உழைத்துவந்தார். அந்தச் சங்கத்தின் ஆதரவில், 'விதவைகள் ஆசிரமம்' ஒன்றை ஸ்தாபித்து, அதில் விதவைகளுக்குக் கல்வியும் ஜீவனோபாயமாகும் கைத்தொழில்களும் போதிக்கும்படி ஏற்படுத்தினார். பெர்கூஸன் காலேஜில் விடுமுறை நாளாகும் தன் ஒழிவுநேரத்தை யெல்லாம், அதை யொட்டிய பிரசாரத்திலும் அதற்காகப் பொருள் சேர்ப்பதிலும் கழித்தார். விதவா விவாகத்தில் கார்வேக்குள்ள அக்கறையினால், விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்ளக்கூடாதென்ற அபிப்பிராயமுள்ளவர்கள், தங்கள் குடும்பத்திலுள்ள விதவைகளை அவர் ஆசிரமத்தில் கல்விகற்க அனுப்பவும் பின்வாங்கினர். இதனால், விதவா விவாக சங்கத்துக்கும் விதவைகள் கல்விச் சாலைக்குமிருந்த சம்பந்தத்தைக் கத்தரித்து, இரண்டையும் பிரிக்கவேண்டியதாயிற்று. இவ்வண்ணம் ஏற்பட்ட விதவைகள் ஆசிரமத்திலேயே கார்வேயும் அவர் மனைவியாரும் உடன்வசித்து, அதை மேற்பார்த்து விருத்தி செய்து வந்தனர். கார்வேயின் லோகோபகார முயற்சியைக்கண்ட மிஸ்மானிங் என்ற ஆங்கிலப் பெருமாட்டி, தன் கைப்பணத்திலிருந்தும், தான் காரியதரிசியாயிருந்த 'தேசிய இந்திய சங்கத்தின்' நிதியிலிருந்தும் அவருக்கு உதவி செய்ததுமன்றி, தன் மரண சாசனபத்திரத்தில், தன் ஆஸ்தியிலிருந்து 50 பவுன் அவர் ஆசிரமத்துக்கு விட்டுப்போனாள். பூனாநகரத்தின் அசுத்த நிலைமையையும் ஊர்வம்பையும் உத்தேசித்து, ஊரைவிட்டு விலகின இடத்தில் விதவைகள் ஆசிரமத்தை வைத்து நடத்த விரும்பி, பூனாவுக்கு நாலுமைல் தூரத்திலே ஹிங்கணி கிராமத்தின் பக்கத்தில் ஒரு கனவான் இனாமாக உதவிய இடத்தில், அவர் தன் மகளின் ஞாபகார்த்தமாகக் கொடுத்த 750 ரூபாயைக் கொண்டு ஒரு சிறு கட்டடம்கட்டி, 1900-ம் வருஷத்தில், ஆசிரமத்தை அவ்விடம் கொண்டுபோனார். அவ்விடத்துக்குக் கட்டைவண்டித் தடமுமே கிடையாது. தினசரி வேண்டிய சாமான்களைப் பூனாவில் வாங்கித் தலைச்சுமையாயும் தோட்

சுமையையும் தூக்கிச் செல்லவேண்டும். இத்தருணத்தில், கார்வேயின் மைத்துனி, அவர் மூத்த தாரத்துடன் பிறந்தவள், விதவை, அந்த ஆசிரமத்துக்காகத் தன் வாழ்நாளைத் தியாகம் செய்ய முன் வந்தாள். கார்வேயின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்படி, அவர் மனைவியும் மக்களும் பூனா நகரத்திலே இருக்க வேண்டியதாயிற்று. அவர் மைத்துனியும் எட்டு அனாதை விதவைகளும் ஹிங்கனி ஆசிரமத்தில் இருந்தனர். ஓர் உபாத்தியாயர் காலையில் சென்று, நாள் முழுதும் அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு, மாலையில் பூனா திரும்புவார். கார்வே, பகல் முழுதும் பெர்கூஸன் காலேஜில் உழைத்துவிட்டு, ஆசிரம வாசிகளுக்கு இராக்காவலாக, மாலையில் ஆசிரமத்துக்கு நடந்து சென்று, இரவு அங்கே தங்கி, மறுநாள் காலையில் பூனாவுக்குத் திரும்பி நடந்துவருவார். இவ்வாறாக மழை வெயில் என்பதின்றி, தன் மனைவி மக்கள் எவரேனும் நோயுற்றால் அவர்களையும் தெய்வமே கதியாக விட்டுவிட்டு, இரண்டு வருஷகாலம் வரை, தன் ஆசிரிய வேலையும் பிற வேலைகளையும் தவிர, தினம் எட்டு மைல் நடந்து, கார்வே ஆசிரமத்தைக் கண்காணித்துக் காத்து வந்தார். ஆசிரமக் கட்டடம் மழையில் ஒழுகினதால், சிலராத்திரிகளில், படுக்கை நனையாமல், பாய்களால் மூடிக்கொள்வார்களாம். இராக்காவல் மாத்திரமன்றி ஆசிரமவாசிகள் சிலருக்குக் கார்வே உயர்தரப் படிப்பும் தானே சொல்லிக்கொடுத்து வந்தார். வழியோ, மழைக்காலத்தில், சேறும் சகதியுமாயிருக்கும். பூனாவிலுள்ள தன் வீட்டில் யாரேனும் அதிக நோயினால் வருந்திக்கொண்டிருந்தால், அன்றும்கூட, கார்வே, மனவேக்கத்தோடும் கவலையோடும் கண்களில் நீர் ததும்ப, ஆசிரமத்தை நோக்கி நடப்பாராம். சிலவேளைகளில் ஆசிரமவாசிகளில் யாராவது ஒரு பெண்ணுக்கு யாதேனும் நோய் வந்துவிட்டாலோ, கார்வேயின் மனக்கவலை நூறு மடங்காகிவிடும். 1902-ம் ஆண்டிலே, பம்பாய் மாகாண கவர்னரின் மனைவியார் லேடி நார்த்கோட் ஆசிரமத்தைப் பார்க்கப் போனபோது, அவருமே கடைசி ஒரு மைல் தூரத்தை நடந்து பார்த்துவிட்டு, தன் வண்டிக்கு மீண்டும் நடந்து வரவேண்டியதாயிற்றென்றால் ஆரம்பகாலத்தில் கார்வே எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

ஒழுக்க சீலமும், ஊக்கமும் எதற்கும் கலங்காத மனவுறுதியும், கருமமே கண்ணாகும் உழைப்பும் ஒருங்கு பொருந்திய உத்தமர் ஒருவர் தொடங்கிய சிரேஷ்டமான பரோபகார முயற்சி ஒன்று நாளா வட்டத்தில் பொதுஜன மதிப்பையும் பெரியோர் பேருதவியையும்

பெற்று, லக்ஷக்கணக்கான பொருளையும் அடைந்து, இந்தியாவுக்கெல்லாம் முன் மாதிரியாகும் மகத்தான சேவாலயமும் வித்தியா பீடமுமாகி இன்று தழைத்தோங்கி விளங்குவது ஆச்சரியமன்று. அகத்தே வறுமையும் கவலையும் கண்ணீரும் ஏக்கமும் புறத்தே ஊர் அலரும் உதாசினமும் உபேக்ஷையுமே மலிந்து அச்சுறுத்திய அதன் ஆரம்ப காலத்திலே, முகம்மது நபியின் மனைவியாரே அவருடைய முதற்சீடராகித் துணைநின்றதுபோல, கார்வேயின் பத்தினியாரும், படிப்பில்லாத ஏழை விதவைகளான அவர் மைத்துனியார் இருவரும் அவருக்குத் துணை நின்று, மற்றெவரும் செய்யவொண்ணாத பேருதவிபுரிந்ததே வியப்பைத் தருகின்றது. இவ்விரு மைத்துனிமாரில் பார்வதி அதாவலே அம்மாளின் சரித்திரத்தை இங்கே சுருக்கிக் கூறுவது பொருந்தும். இவர் கார்வேயின் இரண்டாவது தாரத்துடன் பிறந்தவர்; விதவை; 25 வயதுவரை, தன் தாய் மொழியான மராத்தி யக்ஷரமும் அறியாதவர்; இவருக்கு ஒரு சிறு மகன் உண்டு. ஆசிரமம் தொடங்கியவுடன், கார்வேயின் மனைவியார், தம்முடன் வந்திருக்கும்படி இவரை அழைத்தார். ஆனுல் இவர் எளிதில் இணங்கவில்லை. கடைசியில் ஒப்புக்கொண்டு வந்தார். அவர் வந்து சேர்ந்த நாள் தொட்டே அவர் கல்விப் பயிற்சி தொடங்கிற்று. அரும்பாடுபட்டுக் கல்வி பயின்று, ஐந்து வருஷங்களில் உபாத்தினி பரீக்ஷையில் தேறினுர். சர்க்கார் உபகாரச் சம்பளம் பெற்று வாசித்ததால், சர்க்காருக்குச் சேவிக்க வேண்டியதாயிற்று. ஆனுல், அவரை விதவாசிரமத்தில், தானே உபாத்தினியாயிருந்து வேலை செய்யும்படி துரைத்தனத்தார் அநுமதித்தனர். அப்பால் இவர் ஆசிரமத்தின் கண்காணியாளர். அந்த வேலைக்கு இவரைக்காட்டில் அதிகம்படித்த ஸ்திரீ விதவைகள் கிடைக்கலானவுடன், இவர் சபைகளில் பேசப்பழகி, ஊர் ஊராய் வீடு வீடாய்ச்சென்று, ஆசிரமத்துக்காகப் பணஞ்சேர்க்கத் தொடங்கினுர். அனாதைகளான விதவைகளுக்காக அனாதையான விதவை பொருந்தி பரிந்துபேசும் பேச்சையும் வேண்டுதலையும் எவரே மறுக்கவல்லார். இவர் ஓர் ஊருக்குப் போனவுடன், ஊருக்குப் பெரியவரும் விதவைகள்பால் இரக்கமுள்ளவருமான சிலரைச் சபைக் கூட்டி, இரண்டொரு முறை பேசுவர்; அப்பால், வீடு வீடாகச் சென்று, அற்ப சொற்பத்தையும் அவமதியாமல் பண வசூல் செய்வர். இவ்வாறாக இவர் ஆண்டுதோறும் விடுமுறை நாட்களில் நெடுந்தொலை பிரயாணம் செய்து, சராசரி மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாமல் சேர்த்துத்திரட்டி வருகின்றார். சென்னை மாகாணத்தில் இவர் வந்து பிரசாரஞ்செய்து பணந் திரட்டியதைத் தமிழ்மக்கள் சிலர் அறிக்

திருக்கலாம். இவருடைய ஒரே மகனும், எம். ஏ. பரீக்ஷை கொடுத்து இப்பொழுது ஆசாரிய கார்வே ஸ்தாபித்துள்ள பெண்கள் சர்வகலா சாலையில் ஆசிரியராக உழைத்துவருகிறார்.

விதவாசிரமம் மஹிள வித்தியாலயமானதையும், அப்பால் மஹிளாசிரமமானதையும், நிஷ்காமகர்மமடம் ஒன்று ஸ்திரீகளுக்கென்றே ஸ்தாபிக்கப்பட்டதையும், சிசுவகுப்பு முதல் பி. ஏ. முடிய மராத்தி பாஷையிலேயே பாடங்கள் போதிக்கப்படும் ஸ்திரீகள் சர்வகலாசாலையைக் கார்வே ஸ்தாபித்து, இந்தியாமுழுதும் அதற்குப் போஷகர்களைநாடி யமைத்து நடத்திவருவதையும், இவ்வாறு ஏற்பட்டதாய்மொழி (மராத்தி)ச் சர்வ கலாசாலையில் சில பெண்கள் பி. ஏ. பட்டம் பெற்றிருப்பதையும் இவற்றுக் கெல்லாம் கார்வேக்கு உதவி செய்த பெருமக்களையும் பற்றிச் சுருக்கிக் கூறினுமே இவ்வியாசம் மிக விரிந்துவிடும்.

நான் போய்ப் பார்த்தபொழுது ஹிங்கனியில் தோட்டம் துரவுகளுடன் மிகச் செவ்வையாய்க் கட்டப்பட்டு நடைபெறும் மஹிளாசிரமத்திலே, விதவைகளும் பிறருமாக, 230 பெண்கள் வரை, பல வகுப்புக்களில் படித்துத் தொழில்களைக் கற்றுக்கொண்டிருந்தனர். இப்பொழுது ரோடும், ஆசிரமவாசிகளுக்கென்று ஒரு பெரிய மோட்டார் பஸ்ஸும், வேறு அத்தியாவசியமான சௌகரியங்களும உள. பூனாவுக்கும் ஹிங்கனி ஆசிரமத்துக்கு முள்ள வழியின் நடுவிலே, சில பெண்கள் உயர்தரக் கல்விகற்றுவரும் சர்வகலாசாலை பிரமாண்டமாய் இலங்குகின்றது. ஆசிரியர் அதாவலே, பார்வதி அவலே யம்மாளின் குமாரர்தான் சர்வகலாசாலையின் அமைப்புக்களை எனக்குக் காண்பித்தார். அந்தக் கட்டடத்திலேயே மாணவிகளின் விடுதிகளுமிருக்கின்றன. ஆசாரியகார்வேயின் குமாரரை ஜெர்மனி சென்று இரசாயன சாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்றுப் பெர்கூஸன் காலேஜில் ஆசிரியராயிருப்பவரை, அந்தக் காலேஜில் கண்டு பேசினேன். இரசாயன சாஸ்திரத்தில், பி. ஏ. மாணவருக்கு ஏற்ற பாட நூலொன்று, மராத்தி பாஷையில் அவர் எழுதிவருகிறார். ஆண்களின் உயர்தரக் கல்வியைப் போலன்றிப் பெண் கல்விமட்டும் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படும் பரீக்ஷைக்குள்ளாவது சரியன்று. அதனால் பெண் கல்வி குன்றிச் சிதைந்து நற்பலனிற் குறைவுறும், என்றெண்ணும எனக்குமே, மராத்தி பாஷையிலேயே உயர்தரக் கல்வி முழுதும் புகட்டப்படுவதைப் பார்த்தபோது, என் தாய்மொழியாகும் தமிழ் மொழியின் தற்கால நிலைமையை நினைந்து,

சகித்தற்கரிய பொறுமையும் கிலேசமும் உண்டாயிற்று. மாராத்தியில் இல்லாத பதங்களுக்கும் கருத்துக்களுக்கும் என்ன செய்கிறீர்?" என்று கார்வேயைக் கேட்டதற்கு, "ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலுமுள்ள சொற்களைத் தாராளமாய்க்கொண்டு கையாளுகிறேன். அதனாலென்ன? புதிதாகப் பதங்களை சிருஷ்டித்து அல்லது பிணைத்தமைத்துக் கொள்வதைவிட, இதுவே சிறந்தவழி; ஏனெனின், இப்படிச் செய்தால்தான், வித்தியார்த்திகள் இரசாயன சாஸ்திர நூல்களை ஆங்கிலம் முதலிய வேறு பாஷைகளில் கற்கும்போது, பதங்கள் எளிதில் பொருள் விளங்கி, கருத்துக்கள் சுலபமாய் மனத்தில் பதியும்' என்று பதிலுரைத்தார். "மாராத்தி பாஷா பண்டிதர்கள் இம்முறையை ஒப்புகின்றனரோ?" என்று கேட்டேன். 'சிலர் ஒப்பாமல் ஆக்ஷேபிக்கலாம். வேறு என்ன செய்வது? எல்லாம் காலக்கிரமத்தில் வழக்கமாகிவிடும்' என்று கூறினர். நம் நாட்டுத் தனித்தமிழ்க் கலைஞரும் கழகங்களும், தமிழ்மொழி தமிழ் மக்களின் முன்னேற்றத்தை நாடியுழைக்கும் அறிவாளர் பிறரும், இதைச் சிந்திப்பாராக.

# மோகினி மாசா

## ஒரு தமிழ் நாட்டுச் சரித்திர நாவல்*.

### 1. பூம் பயிர்.

"உலகெலாம் ஒரு நாடக மேடையே,
அலகில் மாந்தர்கள் ஆடும் நடர்களே."

இராமநாதபுரம் சீமை மணற்பாங்கானது. "கருநெடும் பனங்காடுகள்" அடர்ந்தது. அந்த நாட்டிலே பனையூர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற கிராமத்தில் பனைகள் அதிகமென்று சொல்லவேண்

* "மோகினிமாசா" என்ற தலைப்புள்ள சரித்திர சம்பந்தமான நாவல் ஒன்றை என் தகப்பனார் எழுத உத்தேசித்திருந்தார். 'தக்ஷிண சரித்திர வீரருள்' ஒருவரும், ஆங்கிலரின் ஆதிக்யத்தை நிலைநிறுத்தும் பொருட்டு வாழ் நாளெல்லாம் உழைத்து, இறுதியில் ஆங்கிலரின் சூழ்ச்சியாலேயே இறந்தவருமான மஹமது யூசுப் கான் என்பவரே இந்நாவலின் கதாநாயகர். இந்நாவலின் முதல் இரண்டு அத்தியாயங்கள் மாத்திரம் எழுதப்பட்டுள்ளன வகையால், "பஞ்சாமிர்தம்" பத்திராதிபரின் ஞாபகச்சின்னமான இப்பகுதியில் அவ்வாறே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

மா. அனந்தநாராயணன்.

டுமோ? அவ்வூரின் ஏரி உள்வாயிலும் தெருக்களிலுங்கூட, பூலோக கற்பக விருக்ஷம் செழித்து வளர்ந் தோங்கும்; புஞ்சைகள், கொல்லைகளின் வேலிகளெல்லாம் பனஞ்சாலையே, காழ்கொண்டு வைரம் பாய்ந்து கருங்காலிபோற் காணும். அவ்வூர்ப்பனைகள் வீட்டுக் கட்டடவேலைகளுக்குச் சிறந்தன என்பது, நாடறிந்த செய்தி. இது தவிர, அவ்வூரின் கீர்த்திக்குக் காரணமான வேறொன்றையும் இக்கதையினால் அறியலாம்.

1736-ம் வருஷம் மார்கழி மாதம் திருவாதிரை தினத்தன்று, முன் மாலைப்பொழுதில், பனையூரின் கீழ்ப்புறத்துள்ள மாவும் பனையும் செறிந்த தோப்பிலே, பள்ளிச் சிறுவர்கள் சிலர் விளையாடிக்கொண்டிருந்தனர். மொத்தம் பத்துப் பேருக்கு மேலிராரெனினும், அவர்கள் சாதிப்பிரிவு ஐந்தாறுக்குக் குறைவில்லை: ஒருவன் மட்டும் துருக்கன்; மற்றவரெல்லாரும், பிராமணரும் நீசரும் அல்லாத, மத்தியகுல ஹிந்துக்களே. "ராஜாமந்திரி" என்றும், "அம்மையார் சீட்டு" என்றும் வழங்கும் ஆட்டந்தான், அவர்கள் ஆடிக்கொண்டிருந்தது. கீழே உட்கார்ந்திருந்த ஒருவன, பெயர்கள் எழுதின பனையோலை நறுக்குச் சீட்டுக்களை தன் மடியில்வைத்து வேஷ்டியால் மூடிக் கலக்கக் குலுக்கினான். பிறகு, மற்றெல்லாரினும் வயதில் இளைய சிறுவன் ஒருவன், கண்ணை மூடிக்கொண்டு சீட்டுக்களை ஒவ்வொன்றாய் எடுத்து ஆளுக்கொன்று கொடுத்து, கடைசிச் சீட்டைத் தான் வைத்துக்கொண்டான். உடனே துருக்கச் சிறுவன்: "கூவேகூ! இந்த ஊரிலே கேள்விமுறை கிடையாதா? கூவேகூ!" என்று ஓலமிட்டான். இவ்வாறு அவன் கூவி வாய்மூடுமுன், சீட்டுக்களை எடுத்துக்கொடுத்த சிறுவன், மந்தியினும் கடியவேகமாய் ஒரு மாமரத்தில் தொற்றியேறி, எட்டாக்கிளை ஒன்றின்மீது வெகுஜம்பிரமாகத் தோரணக் காலபோட்டு உட்கார்ந்துகொண்டான்.

கூக்குரல் நின்றவுடன், கீழே நின்றவரில் ஒருவன்: "யாரடா அவன், நடுநசியிலே நம்ம ஆக்கத்தைக் கெடுத்து, இப்படிக் கூவுகிறவன்?" என்று கேட்டான்.

**துருக்கப்பையன்:** சாமி! தலையாரி, எசமானே! எங்கள் வீட்டிலே ஒரு பித்தல பானையும் ஓட்டைக் கந்தலும் கொள்ளை போய்விட்டது. இந்த ஊரிலே கேள்விமுறை இல்லையா? கூவே கூ.

**தலையாரி:** கள்ளனைப் பார்த்துப் பிடி.'

து. பை: நல்ல சேவகம் இது! ஊருக்குத் தலையாரி அவராம், நான் கள்ளனைப் பார்த்துப் பிடிக்கவேணுமாம்! 'ஆண்பிள்ளை எங்கடி பாம்படிக்க? அமுக்கடி பொட்டி சளகாலே' என்றால் போலிருக்கே. நானா கள்ளனைப் பிடிக்கவேணும்? சரி அன்னா தூக்கிலே போட வாக்காக உச்சிக் கொப்பிலே உட்கார்ந்திருக்கானே, அவன்தான் கள்ளன்" என்று கூறிக் கையால் சுட்டிக் காட்டினான்.

மாமரத்தின் மேலிருந்த சிறுவன் அதைக்கேட்டு: "அடே பறிகொடுத்த பக்கிரிப்பயலே! நானடா கள்ளன்? என்னையாடா தூக்கிலே போடவேணும்? நான் தான் ராஜா, தெரியுமா?" என்று வெகு துடுக்காய் கூறிவிட்டு கீழே நின்ற தலையாரியை நோக்கி: "அடே தலையாரி! ராஜாவைக் கள்ளன் என்று சொன்ன இந்தப் பக்கிரிக்கு ஏழு சிமட்டாவும் எட்டு விண்ணப்பமும் உடனே கொடு; அவன் பிரியாதை பின்னால் விசாரிப்போம்" என்று கட்டளையிட்டான்.

இதைக் கேட்ட துருக்கப்பையன் தலையாரி கையில் அகப்படாமல் ஓடிப்போய் சிறிது தொலைவில் நின்றுக்கொண்டு "இது என்ன அநியாயம், ராசாவே! சொத்தைப் பரிகொடுத்தவனுக்குத் தண்டனையும் கூடவா? இதென்ன அநியாயம்! தமிள் ராசாக்கமாரெல்லாம் இப்படித்தான்; நம்ம நவாபாய் இருந்தால் நல்லபடி நியாயம் கிடைக்கும்" என்று, வேடிக்கையாய் குறை கூறினான். இதைக் கேட்ட ராஜச் சிறுவன், விளையாட்டை மறந்து, "கூவேகூ" கூறியது பரியாசமே என்பதை மதியாமல் கோபாவேசங்கொண்டு "அடே லப்பைப் பயலே! என்ன சொன்னாய் தமிழ்ராசாக்களெல்லாம் இப்படித்தானா? உங்கள் நவாபு ராஜாக்கள் வண்டோலத்தை வெளுக்கட்டுமா? நேற்று ராத்திரித்தான் ஐயா சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சண்டா சாயுபுவா சண்டாள சாயுபுவா? அவன் சாயத்தை துலக்கட்டுமா? என்று படபடப்புடன் பேசினான்.

"என்ன, என்ன அது? சொல்லு, மருதை, கேட்போம்; கீழே இறங்கிவா" என்று, சிறுவர்களில் பலர் ஆவலுடன் வேண்டிக் கொள்ள, ராஜாச்சிறுவன், சிறிதுமே அச்சமின்றித் தொப்பென அவர்கள் நடுவே குதித்தான். "செத்தான்!" "அடபாவி!" "குரங்குதான்!" என்று சொல்லி அவன் குதித்ததைக் கண்ட தோழர்கள், ஆச்சரியபட்டு மெச்சினர். குதித்தெழுந்தவன், மாமரத்தின் அடியில் புடைத்தெழுந்த ஒரு வேரின்மீது வீற்றிருந்து: "சண்டாள சாயுபு செய்ததைக் கேட்க வருவோரெல்லாம் வரலாம்!" என்று மூன்றுமுறை உரத்துக்கூவினான். விளையாட்டை நிறுத்தி

விட்டு மற்றவர்கள் அவனருகேவந்து சூழ்ந்து உட்கார்ந்து கொண்டு கதைகேட்கலாயினர்; துருக்கப்பையன் மட்டும் தூரவிலகி ஏதோ முணு முணுத்துக்கொண்டு நின்றான். அதைக்கண்ட சிறுவன்: "நீயும் கிட்ட வாடா, லப்பே! நீதான் முக்கியமாய்க் கேட்கவேணும், உள்ளத்தைச் சொன்னால் கோபமென்ன? நீயும் கிட்டவா!" என்று அவனை அழைத்தான். "அவன் கிடக்கிறான், நீ கதையைச் சொல்லு, மருதை, கேட்போம்." என்றனர் சிலர்.

அவர்களுக்குள்ளே, மூத்தான் என்ற பெயருள்ள அயலூரான் ஒருவன்: "எங்கள் சிற்றப்பன் மதுரைக்குப் போயிருந்தவர், மூந்தா நாள் தான் வந்தார். பாண்டியராணியார் மீனாட்சித்தாயி திருச்சிராப்பள்ளியிலே செத்துப்போய் விட்டாளாகவென்று ஊரெல்லாம் ஒரே குழப்பமாம், சிலபேர் சண்டாசாயபுதான் ராணியைக் கொன்று விட்டானென்று சொல்லுகிறார்களாம். எங்கள் மாமன் சொன்னார்" என்றான். உடனே, சிறுவன்: "இவ்வளவுதானா உங்கள் மாமன் சொன்னார்? சரி: கதைமுழுதையும் நான் சொல்லட்டுமா? மூத்தான் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

நீதான் சொல், மருதை! நீதான் சொல், மருதை! என்று ஒரே மனதாய் எல்லோரும் ஓலமிட, சிறுவன் கதை சொல்லத் தொடங்கினான்.

அதற்குமுன் அவனைப்பற்றி நாம் சில கூறுதல் பொருந்தும். அவன்தான் பனையூர அம்பலவாணபிள்ளை மகன்; பெயர் மருதநாயகம்; வயது பன்னிரண்டுக்கு மேலிராது. அங்கு கூடியிருந்த எல்லாரினும் அவனே இளையோனெனினும், அவ்வாலிபர் குழாத்துக்கு அவனே தலைவன்போலவும், மற்றவர் அவனிடத்தில் பிரியமும் அச்சமும் உள்ளவர்போலவும் தோன்றிற்று.

ராஜாச் சிறுவன் மருதநாயகம் சொன்னதாவது:—

"நம்ம சீமையை நம்மராசா கட்டயத்தேவர் ஆளவில்லையா? அதுபோல, பாண்டியமண்டலத்தை, சொக்கநாத நாயகர் ஆண்டு கொண்டு வந்தாராம்.

"நம்மராசா கட்டயத்தேவர்தான் செத்துப்போய் விட்டாரே; வெள்ளையன் சேர்வைக்காரரே இப்பொழுது நம்மராசா" என்று, குறுக்கிட்டு மூத்தான் சொல்ல அவ்வூர் கணக்கப்பிள்ளை மகன்:

"அது கிடக்கிறது, மருதை, பாண்டியராணியார் எப்படிச் செத்தார்கள்? குறைக்கதையையும் சொல், கேட்போம்" என்றார் சிலர்.

"இப்படி, சும்மா நடுவிலே நடுவிலே பேசினால் நான் எப்படிச் சொல்வேன்!" என்றான் சிறுவன்.

"சரி: இனி யாராவது பேசினால் ஒரு குட்டு" என்று சிலர் சொல்ல, மருதநாயகம் கதையைத் தொடர்ந்தான்:—

"பாண்டிய ராணியாரை ஏமாற்றி, நல்லவன் போல பேசிவிட்டு, அவர்களுக்காகச் சண்டை செய்கிறேனென்று வந்து திண்டுக்கல், மதுரைச் சீமையிலிருந்து பங்காரு நாயகரை விரட்டி விட்டானாம், அம்மைய நாயக்கனூர் சண்டையிலே அவர் தோற்றுப் போய், சிவகங்கை சீமைக்கு ஓடிப்போய் விட்டாராம். வடக்கத்துச் சீமை, தெற்கத்துச் சீமை, திருச்சினாப்பள்ளி கோட்டை, எல்லாம் தன் கைவசமாகி விடவே, இந்த துரோகி, இத்தனை நாளாகப் பாண்டியராணியாருக்காகச் சண்டை செய்கிறேன், அவர் ஆளே நான் என்று சொல்லிக்கொண்டிருந்தவன், குபீரென ஒரு நாள் ராணியாரை பிடித்துச் சிறையிலே போட்டு விட்டு, தானே நாட்டுக்கெல்லாம் ராசாவாகி விட்டானாம். ராணியார் இருந்தால் இன்னும் ஏதாவது கலகம் நடக்குமென்று, அவர்களையும் நஞ்சிட்டுக் கொன்று விட்டானாம், இந்தச் சண்டாளசாயபு. நவாபு ராசாக்கள் யோக்கியதை இப்படித் தானிருக்கும்" என்று சொல்லி முடித்தான்.

"அவன் நஞ்சிட்டுக் கொல்லவில்லையாம், அவர்கள் தான் பச்சை நாவியைத் தின்று செத்துப் போய் விட்டார்களாம், எங்கள் சிற்றப்பா சொன்னார்" என்றான் மூத்தான்.

"எப்படியோ இந்தக் கொலைகாரன் பாண்டியராணியாரைத் தொலைத்துவிட்டான், ஐயோ பாவம்!" என்றான் கணக்கபிள்ளைமகன்.

இதற்குள் துருக்கப்பையன்: "அண்ணா அண்ணாவி வருகிறார்; பிரப்பம்பளம் கிடைக்கும்; நாளைக்கு நான் போறேன்" என்று சொல்லிக்கொண்டே ஓடிப் போய்விட்டான். மற்றப் பிள்ளைகளும் ஊர்ப் பக்கம் திரும்பிப் பார்க்க, மூத்தோர் இருவர் அந்தத் தோப்பை நோக்கி வருவதைக் கண்டு: "அடே மருதை, அண்ணாவியும் உங்கள் ஐயாவும் வருகிறார்கள், ஓடு" என்று சொல்லிவிட்டு, நாலாபக்கமும் மாயமாய் பறந்துவிட்டனர். மருதநாயகம் மட்டும் ஓடிப்போகாமல், மரத்தின்மேற் பாய்ந்தேறி, இலைகள் அடர்ந்த சில கிளைகளின்

ஊடே பதுங்கிக் கொண்டான். பனையூர்ப் பள்ளி உபாத்தியாயர் ஆறுமுகம் பிள்ளை என்ற "அண்ணாவியும்" அம்பலவாண பிள்ளையும் தோப்புக்குள் வந்து பார்க்க ஒருவரும் அகப்படவில்லை.

அண்ணாவி ஆறுமுகம் பிள்ளைக்கு ஐம்பது வயதிருக்கலாம். அவர் கறுப்பு; குள்ளம; இரட்டை நாடி சரீரம்; பருத்த தொந்தி. விரைந்து நடந்தால் மூச்சுவாங்கும்; [illegible] குறைவானவர். அவர் தமிழ்ப்படிப்புக் கொஞ்சமே; ஆனால் ஒருவாறு யாப்பிலக்கணத்தை மதியாது கவிபாடும் சக்தியுள்ளவர்; அதனால் தான் கம்பருக்குச் சமானம் என்பதே, அவர் நினைப்பு. அம்பலவாண பிள்ளைக்கு நாற்பது வயது தானிருக்கும். ஆனால் அவர் சிவப்பு, நெட்டை. ஒல்லி, அண்ணாவியிடத்தில் அதிக மதிப்பு வைத்தவர்.

**அண்ணாவி**— பயல்கள் பறந்துவிட்டார்களே! நாளை பள்ளிக்கு வரட்டும், சொல்லுகிறேன். வெளுத்து விடுகிறேன்.

**அம்பல**—அவர்கள் ஓடிப்போவதை நான் பார்த்தேன். நம் மருது போனதாக தெரியவில்லையே? இங்கே தான் பனைதூரிலே எங்கேயாவது பதுங்கிக் கொண்டிருப்பான்.

**அண்ணாவி**— ஒருவேளை அவன் இங்கே வரவில்லையோ?

**அம்பல**—இங்கே தான் வந்தானும், ஊர்ப்பயல்கள் குறும்புகளுக்கெல்லாம் அவன் தான் சட்டாம்பிள்ளை.

**அண்ணாவி**—எனக்குத் தெரியாதா என்ன? வயதிலே இளையவனே ஒழிய வெகு துடி. படிப்பிலும் அப்படித்தான். ஆனால் அக்கறையேயில்லை; விளையாட்டும் குறும்புதான்.

அண்ணாவியுடன் பேசிக்கொண்டே, அமபலவாணப்பிள்ளை, தோப்பின் நாற்புறமும் மரத்தூர் மறைவுகளையும் தேடிப்பார்த்தார்; மகன் அகப்படவில்லை. பிறகு "அடே மருத! மருதுநாயகம்! எங்கேயாவது ஒளிந்துக்கொண்டிருந்தால், வந்துவிடு; உன்னை அடிக்கவில்லை" என்று, உரத்துக்கூவினார்; பதிலில்லை. அண்ணாவி: "அடே மருதை! மரியாதையோடு உடனே வந்துவிடு; இல்லாவிட்டால் நாளை தோலை உரித்து விடுவேன், பார்த்துககொள்!" என்று பயமுறுத்திக் கூவினார்; அதறகும் பதிலில்லை. "இங்கேயில்லை அவன்; திரும்பி ஊரிலேபோய்ப் பார்க்கலாம். ஒருவேளை இதற்குள் வீடு போய்ச்

சேர்ந்திருப்பான்'' என்றார் அண்ணாவி. அப்படியே இருவரும் திரும்புமுன், கடைசிமுறை, அம்பலவாணபிள்ளை, தோப்பை ஆராய்ந்து பார்க்கையில், மரத்தின்மேல் ஏதோ சிறிது சத்தம் கேட்டது. அம்பலவாணபிள்ளை, உடனே அண்ணாந்து உற்றுநோக்கவே, தம் மகன் கிளைகளின் இடையில் பதுங்கிக்கொண் டிருப்பதைக் கண்டு திகிலுற்றுக் கையற்றாரின்றார். பிறகு, திடீரென்று கூவினால் அவன் பயந்து தவறி விழுந்துவிடக் கூடுமென்று அஞ்சினவராய், சாதாரண குரலில்; "அடே மருது! நீ இருக்கும் இடம் தெரிந்து விட்டது. உன்னை அடிக்கவில்லை; பயப்படாதே; பதனமாய், மெதுவாய், இறங்கிவா. பொழுது சாய்ந்துவிட்டது, வீட்டுக்குப் போகலாமவா. அண்ணாவியும் அடிக்கமாட்டார், அவரிடம் நான் சொல்லிக்கொள்கிறேன்; கீழே மெதுவாயிறங்கிவா'' என்று சொன்னார். "எங்கே? எங்கே இருக்கிறான் பயல்? குரங்குதான் அவன்'' என்று சொல்லிக்கொண்டு, அண்ணாவியும் மேலே நோக்க, பார்வைக் குறைவால் அவர் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆனால், அவர் அதை வெளியிடாமல்; "ஆ! அதோவா? தெரிகிறது. அப்பனே! மருதை! அஞ்சாதே; பதனமாய் இறங்கிவா'' என்றார்.

மருதநாயகம், ஒன்றுக்கும் பதில் பேசாமல், கீழேயும் இறங்காமல், இருந்த விடத்திலேயே யிருந்து மௌனம் சாதித்தான். அண்ணாவிக்குக் கோபம் வந்துவிட்டது. "அடே மருதை! நான் கூப்பிடுகிறது காது கேட்கவில்லையா? உடனே கீழே இறங்கி வருகிறாயா, அல்லது என்னவேண்டும்?'' என்று அதட்டினார். "அதட்டாதேயுங்கள்'' என்று அவரைக் கையமர்த்திவிட்டு, அம்பலவாணபிள்ளை: "அடே! இருட்டிப்போகிறது; பூச்சி பொட்டுக்கள வெளிக்கிளம்பிவிடும், உனக்கும் இறங்கக் கண் தெரியாது; உடனே பதனமாய் இறங்கிவா; உன்னை ஒன்றும செய்யவில்லை, பயப்படாதே; உன் ஆத்தாள் கவலையோடு காத்திருக்கிறாள்; உச்சிப் பொழுது முதல் நீ போனவிடம் தெரியவில்லையே என்று விசனப்பட்டு அழுகிறாள்; உடனே இறங்கிவா, பத்திரமாய் இறங்கு'' என்று நயமாய்ச் சொன்னார். இதைக் கேட்டபின்பு: "நீங்களும் அண்ணாவியும் வீட்டுக்குப் போங்கள்; நான் இதோ உங்கள் பிறகாலே வந்துவிடுகிறேன். நீங்கள் இங்கே இருக்கும்வரை நான் இறங்கமாட்டேன்'' என்று சிறுவன் விடைகூறினான். "என்ன துடுக்கு, என்ன திண்ணக்கம், பாருங்களேன்!'' என்றார் அண்ணாவி.

"நாம் போவோம் வாருங்கள்; அது பிடிவாதக்கார மூதி; சொன்னால் சொன்னபடிதான் செய்யும்; நாம் போவோம் வாருங்கள்; இனித் தனியே வந்து சேரும்" என்று சொல்லி அண்ணாவியை அழைத்துக்கொண்டு, "அடே மருது, அவசரப்படாதே, பதனமாய் இறங்கு" என்று கடைசியாய் மகனை எச்சரித்துவிட்டு, அம்பலவாண பிள்ளை வீடு திரும்பினார். அவர்கள் தோப்பினின்று வெளியேறிய பின், சிறுவனும் மரத்தைவிட்டுக் கீழே இறங்கி, மெதுவாய் வீடு நோக்கி நடந்தான்.

மருதநாயகம் வீடுபோய்ச் சேரும்போது, அவன் தந்தையும் அண்ணாவியும், அவன் வரவை எதிர்நோக்கினவராய் வீட்டின் வெளித் திண்ணையிலிருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். மரத்தை விட்டுஇறங்கச் செய்வதற்காகவும், மனம்பதறிக் கீழேவிழுந்து விடாத படியும், அவனை 'ஒன்றும் செய்தில்லை'யென்று அம்பலவாண பிள்ளை கூறினாரேயன்றி, அவ்வளவு இலேசாய் தண்டனை ஒன்றுமின்றி விட்டுவிடுவது, அவர் உத்தேசமில்லை. 'அடியாத மாடு படியாது', 'அடி உதவுவதுபோல அண்ணன் தம்பிகள் உதவார்' என்பன, அவர் வாயில் அடிக்கடி வரும் வாக்கியங்கள். சிறு குழந்தைகள் பசியினாலோ நோவினாலோ அழுதாலும்கூட, 'அழுகையின் காரணம் மனமுறண்டு' என்று அவர் நினைத்தால், அதைத் திருத்துவதற்காகக் குழந்தையை அடித்துவிடுவார். இந்தக் கொள்கையைத் தழுவியே தம் ஒரே மகன் மருதநாயகத்தையும் அவர் வளர்த்துவந்தார். அவர் மனைவி, மருதநாயகத்தின் தாய், அலர்மேலண்ணியோ, இதற்கு நேர் எதிரிடையான எண்ணமுள்ளவள். குழந்தைகள் மனமுறண்டினால் துஷ்டத்தனம் செய்து, சொல்மீறி நடந்தபோதும்கூட, அன்பினாலும் இன்சொல்லினாலுமே அவர்களைத்திருத்த வேண்டுமென்று நினைத்தொழுகுபவள். இந்த அபிப்பிராயபேதம் காரணமாகத் தம் பதிகளுக்குள் அடிக்கடி பூசல்கள் நேருவதுமுண்டு. மருதநாயகத்தை எதிர்பார்த்து, அவள் வீட்டு வாசலில், தெருவில் நின்று கொண்டிருந்தாள்.

அவன் வீதி வழியே மெதுவாய் வருவதைக் கண்டவுடன், "உச்சிப்பொழுது முதல் எங்கே போயிருந்தாய், மருது! என்னவோ ஏதோ என்று பயந்து நான் விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறேனே. என்னிடம் சொல்லிக்கொண்டும் போகவில்லையே. எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டுக்கொண்டே எதிர்கொண்டு சென்று, அவனை அணைத்துக்கொண்டாள்.

"எங்குமில்லை; மோட்டுக்குப்பத்திலே ஒரு சாவற்போர் நடந்தது, அதைப் போய்ப் பார்த்துக்கொண்டிருந்தோம். அப்புறம் எல்லாருமாக கிழக்குமார்தோப்பிலே விளையாடிக்கொண்டிருந்தோம். நான்தான் வருவேனே! நீ ஏன், அம்மா, ஐயாவையும் அண்ணாவியையும் தேட அனுப்பினாய்!" என்றான் மகன்.

அலர்மே—உன்னைக் காணவே இல்லையே; போன மாதம் தானே இசக்கிமகன் பாமபு கடித்து இறந்து போனான், என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்; ஐயா கேட்டார்கள், பார்க்கச் சொன்னேன்; வா; வீட்டுக்கு வா; பசிக்கவில்லையா உனக்கு? பணியாரம் தருகிறேன் வா. இப்படிப் போவோம் வா" என்று சொல்லி, வீட்டுப் பக்கத்திலுள்ள முடுக்கு வழியே மகனை அழைத்துச் சென்று, கொல்லை வாசல் புறமாக வீட்டுக்குள் கொண்டு போய் விட்டாள். தன் கணவரும் அண்ணாவியும் திண்ணையில் பேசிக் கொண்டிருப்பதன் காரணம் அவளுக்குத் தெரியும்; ஆனால், பையனுக்கு, அவர்கள் அங்கிருப்பதே தெரியாது.

தன்மனைவி தெருவிற் சென்று நிற்பதன் காரணம் அம்பலவாணபிள்ளைக்குத் தெரியும்; ஆனால், அண்ணாவியின் பேசசுரஸத்தில் சிறிது அயர்ந்துவிட்டார். தன் மாணாக்கன் திரும்பி வந்த பின்பு அவனைத் தண்டிக்கும் பொருட்டே அண்ணாவி தன் வீடு செல்லாது அங்கிருந்தாரெனினும், தான் கடைசியாய் புதிய மகாராசாவின் மேல் பாடிய வெண்பாவின் சொல் நயம் 'பொருள் நயங்களை பிள்ளைக்கு எடுத்தோதுவதில் அவர் மனம் ஆழ்ந்து விட்டது.

முகத்தைதக்கண் பார்க்கின், முகவைப் பெரும்பதியாய்!
சகத்தைத் தனிக்குடைக் கீழ்தாங்குவாய்!—அகத்தில் மிடி
கைவதுரையேன், நான், பெண்ணை நகருறைவேன்;
சைவதுரையே நீ சண்.

இந்த வெண்பாவை இருமுறை கூறிவிட்டு, அண்ணாவி, "இப்படி பாடுவது எல்லாருக்கும் வர்துவிடாது. "முகத்தைதக் கண்பார்க்கின்" என்றால் ஏதாவது விளங்குகிறதா? கடைசிச் சீரை எடுத்து முதற் சீருக்கு முன் சேர்த்தால், "சண் முகத்தைக் கண்பார்க்கின்" என்று ஆகிவிடும. சண்முகம் என்றால் ஆறுமுகம்; தெரிந்ததா? இதனாலே, கேளாமல் கேட்டு விட்டேன்; மகாராசா ஒன்றும் கவனிக்கவில்லை என்றால், நமக்கு அவமானமில்லை; யாரோ சண்முகம பாடினான் என்று போய்விடும்; ஒரு

லையா அவர்கள் பாட்டின் நயத்தை- அறிந்து, சன்மானம் செய்ய விரும்பி, யாரென்று விசாரித்தால், "பெண்ணை நகருறைவேன்"— பெண்ணை என்றால் பனை, பனைநகர், பனையூரிலிருக்கும் ஆறுமுகம் என்பது துலங்கிவிடும். மகாராசா கண் பார்த்துவிட்டால், அப்புறம் கலி நீங்கிவிடும் என்பது விளங்க, "அகத்தில் மிடிநைவதுறையேன்" என்று வைத்திருக்கிறேன். மிடி என்றால் தரித்திரம். அதிலே ஒரு சாமர்த்தியம் பண்ணியிருக்கிறேன் பாருங்கள். தரித்திரம் வந்து குடியிருந்துகொண்டு, ஒன்றும அகப்படாமே, தானே நைகிறது. என்ன? மகாராசாவின் கடாட்சச் சிறப்பது." இவ்வாறாகப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார் அண்ணாவி.

பணியாரம் உண்டு பசியாறியபின், மருதநாயகம்;

"ஏன் அம்மா! அண்ணாவி குரல் கேட்கிறதே; ஐயாவும் அவர்களும் பேசிக்கொண் டிருக்கிறார்களோ?" என்று கேட்டான்.

"ஆமாம், மெதுவாய்ப் பேசு; ஐயாவுக்கு நீ திரும்பி வந்தது தெரியாது இன்னும்" என்றாள் அவன் தாய்;

மருதநாயகம் : "அவர்கள் தான் ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்களே, நான் என்ன தவறு செய்துவிட்டேன்? எனக்கென்னபயமோ?" என்று சொல்லிக்கொண்டே தெரு வாசற்புறம் சென்றான். அவனைக் கண்டவுடன் பிரசங்கம் நின்றுவிட்டது. அம்பலவாண பிள்ளை "வந்து விட்டாயா? இங்கே வா, மருது! கையைக் கட்டிக்கொள். எங்கே போயிருந்தாய்? ஏன் அந்த மரத்திலே ஏறினாய்? கீழே விழுந்தால் பிழைப்பாயா?" என்று கேட்டார். இதற்குள் அலர்மேலண்ணியும் வந்து வாசற்கதவு நிலையோரமாக நின்று கொண்டாள். "இன்றுதான் பள்ளிக்கூடமில்லையே; எல்லாரும் சாவற்போர் பார்க்கப் போயிருந்தோம்; அப்புறம் மாந்தோப்பிலே "ராஜாமந்திரி" சீட்டு விளையாடிக் கொண்டிருந்தோம்" என்று சிறுவன் பதில் உரைத்தான்.

"மரத்தில் ஏன் ஏறினாய்?"

"அண்ணாவியும் நீங்களுமே வருவதைப் பார்த்தவுடன் எல்லாரும் ஓடிப்போய் விட்டார்கள். நான் மட்டும், ஓடாமே மரத்திலேறி ஒளித்துக் கொண்டேன்." "இனிமேல் மரத்தில் ஏறாதே! இனிமேல் மரத்தில் ஏறாதே!" என்று சொல்லிக்கொண்டே இடியென, அம்பலவா

ணப பிள்ளை ஒரு கன்னத்திலும் அண்ணாவி மறு கன்னத்திலுமாக, படீர் படீர் என்றடித்தார்கள். இப்படி நடக்குமென்று மருதநாயகம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. "அடிக்கவில்லை; ஒன்றும் செய்யவில்லை" என்று சொல்லிவிட்டு, என்ன ஐயா, அடிக்கிறீர்கள்? நான் என்ன தப்பிதம் செய்துவிட்டேன்? நீங்கள் மட்டும் இப்படி சொல்லலாமோ?" என்று அழுதுகொண்டு கோபமாய்க் கேட்டான். அவன் தாய்: "ஆத்தாடி! இப்படி இரண்டு பேராய்க் கூடிக்கொண்டு, இப்படிக்குழந்தையை அடிபபார்களா? இதென்ன அநியாயம்? அவன் என்ன செய்துவிட்டான்" என்று கூறி, கையைப் பிடித்து அவனை வீட்டுக்குள் இழுத்தாள்.

"மரத்திலிருந்து விழுந்தால் என்ன செய்துவிட்டானென்று தெரியும். இப்படி நீ இளக்காரம் கொடுத்துக் கொடுத்துதான், ஒருவரையும் மதியாமே, ஒருவர் சொல்லும் கேளாமே, இப்படி முறண்டு மூத்துப்போய்த்திரிகிறான். அவன் வீட்டிலே பெண்டு மூத்துப்பிள்ளையும் மூத்துப்போச்சு" என்றார், பிள்ளை.

"பிள்ளை தான் வயதில் மூத்தால் பிதாவின் சொற்புத்தி கேளான்;

கள்ளி நற்குழலாள் மூத்தால் கணவனை மதிக்கமாட்டாள்" என்று, அண்ணாவி கவியோதினார்.

"சொற்படி கேளாமல் நான் என்ன செய்துவிட்டேன்? ஊரிலே அரிசசந்திர நாடகம் கூத்துப் போட்டபோது, நீங்கள்தான் அப்படி நடக்கவேணும், பொய்யே சொல்லக்கூடாது என்றுசொல்லிவிட்டு, இப்பொழுது இரண்டுபேரும் இபபடிச் செய்கிறீர்கள்!" என்று மீண்டும் சிறுவன் ஆக்கிரகத்தோடு கத்தினான்.

இதைக் கேட்டவுடன் அம்பலவாண பிள்ளைக்கு மூர்க்க வெறி வந்துவிட்டது. பரபரப்புடன் எழுந்துபோய், "நானடா பொய் சொல்லுகிறேன்? நானடா பொய் சொல்லுகிறேன்?" என்று கூறிக்கொண்டே, மகனை மீண்டும் அடித்தார்.

"ஆத்தாடி! குழந்தையை இப்படி அடிப்பார்களா? இப்படி ஒரு வெறியா?" என்று சொல்லி, அவர் மனைவி விலக்கினாள்.

அன்றிரவு, தாய் என்ன சமாதானம் செய்தும், சிறுவன் சமாதானப் படவில்லை; சாப்பிடவுமில்லை. "நான் எங்கேயாவது ஓடிப்

போய்விடுகிறேன் பார்; இந்த வீட்டிலே நான் இருக்கமாட்டேன்" என்று சொல்லி, விசித்து விசித்து அழுதுகொண்டே தூங்கினேன்,

# இந்திய தேசியக் கல்வி.

ஸ்ரீ யுதலாலாலஜபதிராய்,

(451-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## ஏழாவது அதிகாரம்

### தேசபக்திப் பயிற்சி

'தேசபக்தி'யையும் 'தேசிய உணர்ச்சி'யையும் பேணி வளர்ப்பதை ஒழுங்கான பாடமாகக் கொள்ளாத தேசியக் கல்விப் பயிற்சி முறை எதையும், சம்பூர்ண முறையாகச் சொல்ல முடியாது. இந்த விஷயத்தில், நாம் ஐரோப்பாவைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் ஒவ்வொன்றிலும், தேசபக்தியும் தேசீய உணர்ச்சியும் பள்ளிக் கூடங்களிலே புகட்டி வளர்க்கப் படுகின்றன. இங்கிலாந்திலும அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலும் செய்யப்படுவதை, இந்தியக் கல்வி யறிவாளர் தெரிந்துகொள்ளலாம்; ஆனால், ஜெர்மனியிலும் பிரான்ஸிலும இதுவரை செய்யப்பட்டதும், இப்பொழுது செய்யப்படுவதும் என்ன என்பதை, நம்மவரில் சிலரே அறிந்திருப்பர். ஆதலால், அமெரிக்க ஆசிரியரான ஸ்காட் என்பவர், சிலவாண்டுகளுக்கு முன் இதைப் பற்றி வெளியிட்ட ("தேசபக்தர்களை உண்டாக்கிவிடுவது" என்னும்) நூலிலிருந்து, நமக்குப் பொருத்தமான உபயோகமான சில பகுதிகளை எடுத்துக் கூறுகிறேன்.

பிரான்ஸ் தேசத்திலே, பழைய ராஜாங்க முறையில், கல்விப் பயிற்சி எல்லா ஜனங்களுக்கும பொதுவாக இல்லை, கட்டாய மில்லை, இலவசமில்லை. நடைபெற்ற அற்ப சொற்பமான கல்வியறிவு, மத போதகர் மதாசார்யர்களால், உயர்தரக் குடும்பங்களிற் பிறந்த பிள்ளைகளுக்கே புகட்டப்பட்டு வந்தது. அவர்களும் கூட, இப்படிப்பட்ட கல்வியைவிட, நாட்டிய மாடுவதையே அதிகம் பாராட்டிப் பயின்று வந்தனர்; அந்தக் கலையே செல்வத்துக்கும் பெருமைக்கும் ராஜ

சபையில் மேன்மை யடையவதற்கும் ஏற்ற வழியாயிருந்தது. அப்பால் இராச்சியப் புரட்சியும் கலகங்களும் ஏற்பட்டு, முதலாவது நெப்போலியன் ஆதிக்கம் பெற்ற காலத்திலே, ராஜபக்தியும் விசுவாசமும், அரசன் சொற்படி யொழுகும் நடக்கையுமே சிறந்தனவாகப் போதிக்கப்பட்டன. "பிராஞ்சியர் மதித்து வேண்டுவ தெல்லாம், போர் வெற்றியின் இசையும் தற்பெருமையும்தான்; சுதந்திர உணர்ச்சியே அவர்களுக்கில்லை" என்று நெப்போலியன் சொன்னார். அதற் கேற்றவாறு, தன் சக்ராதிபத்தியமும் பேரும் கீர்த்தியுமே வளர்ந்தோங்கும்படி, கல்வி போதனாமுறையை அமைத்தார். நெப்போலியன் வீழ்ச்சிக்குப்பின், பிராஞ்சியரின் எண்ணங்களிலும் பலமாறுதல்களும் குழப்பமும் உண்டாகின. அப்பால் 1870-ம் ஆண்டிலே பிராஞ்சியர்கள் ஜெர்மானியர்களால் போரில் முறியடிக்கப் பட்டு, பிரான்ஸ் தேசத்தில் இரண்டு ஜில்லாக்களை ஜெர்மனியாருக்கு விட்டுக் கொடுக்கும்படி நேரிட்டது முதல் பிரான்ஸில் ஒரு புதிய உணர்ச்சியும் கிளர்ச்சியும் உண்டாகி, குடியாட்சி அவாவும், தேச பக்தி தேசிய வுணர்ச்சிகளை வளர்ப்பதில் ஆவலும் ஏற்பட்டன.

தலைமுறை தலைமுறையாகத் தொன்று தொட்டு வரும் கோட்பாடுகளுக்கும பழைய வழக்கங்களுக்கும், கல்விப் பயிற்சி எவ்வளவு உட்பட்டது என்பதை எடுத்துக் கூறுகையில், அவற்றின் சக்தியினால், முதலில் அத்தியாவசியமான சில ஏதுக்களால் உண்டான ஒரு கல்வி முறை, அந்த அவசியம் முழுதும் நீங்கிய பின்னுங் கூட, எளிதில் மாறாது நடைபெற்று வரும் என்றும்; கிரீக், லத்தீன் முதலிய புராதன (இப்பொழுது வழக்கற்று ஒழிந்த) பாஷைகளிலுள்ள பழைய கிரந்தங்களை ஆங்கிலக் கல்விச்சாலைகளில், இதனால்தான் இந்நாள் வரை அதிமுக்கிய பாடங்களாகக் கற்று வந்தனரென்றும்; ஜனசமூக அவசியத்தினால் ஏற்படும் புதிய முறைகள், இதனால்தான் பள்ளிக்கூடங்களில் ஏற்றுக் கொள்ளப்படாது நெடுநாள் தியங்குமென்றும், கூறியிருக்கிறார். ஆகையால் ஒவ்வொரு நாட்டுக்கல்விப் பயிற்சி முறையிலும் (தற்காலத்துக்கு அவசிய மில்லாத பொருத்தமில்லாத காலஞ்சென்ற) பழைய கோட்பாடுகள் தங்கி, முற்போக்கைத் தடுத்துநிற்பதைக் காண்கிறோம். *தேசிய உணர்ச்சி ஜனங்களுக்குள் பிறந்து வளர்ந்தேற ஏற, கல்விப் பயிற்சியும் அரசியில் ஒரு

* இது போலவே இந்தியாவிலும், பழைய காலைய குருகுலவாச முறையும், ஸம்ஸ்கிருதகாவியம் பயிற்சியும், வேதாத்தியயனமும், "அடிப்பட்ட சான்றோரிடத்தில் முறைப்பட்ட கேள்வி" முறையில் ஏற்படும் புலமையும் ஜனங்களால் நன்கு மதிக்கப்படுகின்றன என்பது நூலாசிரியர் கருத்து—மா.

முக்கியகருவியாகி, அரசியற்கலையில் ஒருபகுதியாகிவிட்டது. ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலுள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் வெகுவாய் இது பொருந்தும். தேசிய எண்ணங்களாலும் ஆசைகளாலும் தூண்டப்பட்டு முன்னோக்கி வாழும் ஒவ்வொரு ஜனசமூகத்திலும், மற்றெந்த ஏற்பாட்டிலும் விடப் பள்ளிக்கூடங்களில் தேசிய உணர்ச்சி நிமிர்ந்தோங்கி விளங்குவதைக்காணலாம். ஐரோப்பிய பள்ளிக் கூடங்களில் நடைபெறும் போதனை முறைகளையும் பாடப் புஸ்தகங்களையும் ஆராய்ந்து பார்த்தால் ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் பலவற்றில் தேசிய உணர்ச்சியும் தேசிய காரியங்களும் எவ்வண்ணம் வளர்ந்தேறுகின்றன என்பது துலங்கும்.

இவ்வளவு தூரம் ஆசிரியர் ஸ்காட்டின் கூற்றுக்களை எடுத்தோதுவதன் காரணம் யாதெனில், தேசிய உணர்ச்சியைப் பேணி வளர்க்கப் பள்ளிக்கூடங்கள் அதி முக்கிய கருவிகள் என்பதையும்; நம்முடைய கல்விப் பயிற்சி முறையின்மீது காலஞ்சென்ற பழஞ் சுமைகளைக் கொண்டு சுமத்தி அமுக்கி விடுவது தவறாகுமென்பதையும்; என் நாட்டினருக்கு விளக்கி வற்புறுத்தும் பொருட்டேயாம். நமக்கு முன் வழிகாட்டிகளாய்ச் சென்றுள்ள பிறநாட்டார் விழுந்த குழிகளில் நாமும் விழாமல், அவர்கள் செய்த பிழைகளை நாமும் செய்யாமல் விலகிக் கொள்வதே, சரித்திரத்தினால் கிடைக்கும் பெரும்பயன். மலையின் மேல் விளக்குப் போல் சரித்திரம் துலக்குவதைக் கருதாது கைவிட்டு அதே தவறுகளை நாமும் செய்தல், பெருங் குற்றமும் அறிவின்மையுமாகும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக, பிராஞ்சிய ஜனங்களும் துரைத்தனத்தாரும், தங்கள் சிறுவர் சிறுமிகளுக்குத் தேசபக்தியைப் புகட்டுவதில், வெகு சுறுசுறுப்பாய் உழைத்து வருகின்றனர். ஆண்பிள்ளைகள் அனைவர்க்கும் யுத்தப் பயிற்சியைக் கட்டாயமாக்குவதையும் நாட்டில் குடியாட்சியே மேலாக நிலைநாட்டுவதையும் விட, தேசியக் கல்வி முக்கியமானதென்று, காம்பெட்டா கருதினார். "இந்த நாட்டை புனருத்தாரணம் செய்யவேண்டும்; அதன் வழக்கங்களை மாற்றிப் புதுப்பிக்கவேண்டும்; நம் கேடுகளுக்கெல்லாம் மூலகாரணமாகும் அறியாமையைத் தொலைக்கவேண்டும்; இவற்றுக்கெல்லாம் ஒரே மருந்து தானுண்டு; எல்லோரையும் படிப்பிப்பது தான் அந்த மருந்து" என்று அவர் வற்புறுத்தினார். எவ்விதமான ஆபத்திலும் தாய் நாட்டைக் காக்கவல்ல, தீவிரமான, உண்மையான தேசபக்தியைப் புக

ட்டுவது, தேசியக் கல்வியின் ஆணிவேராயிற்று. இவ்வண்ணம் தேசபக்தியை வளர்ப்பதில், ஆறு அம்சங்கள் முக்கியமாய் வற்புறுத்தப் பட்டன. அவையாவன. (1) தாய் நாட்டின்மீது அன்பு (2) போர் விருப்பும். எல்லாரும் யுத்தத்தில் சேவிக்கக் கடமைப்பட்டவர் என்னும் கட்டாயமும் (3) வீரவுணர்ச்சியைப் பேணி வளர்த்தல் (4) சைநியங்களை வைத்துப் பராமரிக்க, ஜனங்கள் வரிகொடுக்க வேண்டுமென்னும் அறிவு (5) தேசக் காப்பு நிலைமையின் முக்கிய விவரங்களைப் போதித்தல்(6) வலிமிக்க அந்நியர்களால்சூழப்பட்டுள்ள நாட்டிலே, ஆள்கட்டுக் குறையாமல், ஜனத்தொகை பெருகவேண்டுமென்ற உணர்ச்சி, என்பனவாம்.

பிராஞ்சிய பள்ளிக் கூடங்களில் வழங்கும் பாடபுஸ்தகங்களிலிருந்து; சில பகுதிகளை இனி எடுத்துக் காட்டுவோம்.

"எது தாய் நாடு, உனக்குத் தெரியுமா? உன் தாய் உன்னைக் கைகளில் ஏந்திப்புலாவிய வீடு அது. நீ மனமகிழ்ந்து விளையாடும் மைதான வெளி அது. பிரான்ஸின் கொடி பறக்கும் ஊர்ப்பொது மண்டபம் அது. உன் முன்னோர்கள் உறங்கும் புதையல் பூமி அது. ஊருக்கு நீ திரும்பி வரும் தோறும், புதிய மனமகிழ்ச்சியோடு நீ பார்க்கும் கடிகாரம் அது. உன் மூதாதைகள் செய்த வேலைச் சுவடுகளுள்ள புலங்கள் அது. பல முறை நீ ஏறியுள்ள குன்றுகளும் மலைகளும் அது. ஒரே நாட்டினர் எல்லோரும் தேசத்தொண்டில் சகாக்களே; அவர்கள் ஒரே பெருங்குடும்பம், ஜனசமூகம ஆகின்றனர்.

"பிரான்ஸில் வாழும் 370 லக்ஷம் ஜனங்களும் சேர்ந்தது பிரெஞ்சு குடும்பம். அவர்களுக்கெல்லாம் பூர்வசரித்திரம ஒன்று தான், சுகங்கள் ஒன்று தான், ஆசைகள் ஒன்றுதான்; தங்களுக்குப பொதுவான தாய் நாடு க்லேசப்பட்டால அவர்கள் மனம் வருநதுகிறார்கள்; அதன் க்ஷேமத்தைக் கண்டு அவர்கள் கர்வம் கொள்ளுகிறார்கள்; தாய் நாட்டின் வாழ்வு தாழ்வுகளை அவாகள் பகிர்நதனுபவிக்கிறார்கள்."

மற்றொரு பாடப் புஸ்தகத்திலே! "பிரான்ஸின் பக்திதான் ஆனந்த மார்க்கம்; இதுவுமன்றி, கடமைகளி லெல்லாம் முதல் கடமை அதுவே" என்றெழுதி யிருக்கிறது. வேறொரு பாடப் புஸ்தகம: "உன் தேகத்தின் முழுச்சக்தியோடும் ஊக்கத்தோடும், உன் ஆத்மாவின் பூரண பக்தியோடும் நீ நேசித்து, கௌரவித்து,

உழைத்தற்குரிய சமூகம் உன் தாய்நாடுதான்" என்று கூறுகிறது. ஒரு சிறு பாட்டில், ஒரு தகப்பன் தன் மகனை நோக்கிப் பின்வருமாறு புத்தி சொல்லுகிறான் :—

'மகன்,' 'சகோதரன்,' எனக் கடைவரை வாழ்ந்து, என்
அகமகிழ் ஆனந்தத்தை, நீ அதிகரி ;
ஆயினும், சிறுவ ! உன் நேயம் அனைத்தினும்,
தாயெனும் பிரான்ஸின் தன்பால்
நேயமே, முன்னதா நிலவுறச் செய்கவே.'

இப்படிப்பட்ட கூற்றுக்களில் விசேஷமொன்றுமில்லை. இவற்றைப் போன்று சிறந்து மனக் கிளர்ச்சியை உண்டு பண்ணக்கூடிய கருத்துக்களை, "வந்தேமாதரம்," "அமார் தேசம்," "ஹிந்துஸ்தான் ஹமாரே," முதலிய நமது தேசிய கீதங்களில் காணலாம். முக்கிய விஷயம் யாதெனில், பாடப் புஸ்தகங்கள் மூலமாயும் வாய் மூலமாயும் இவற்றையெல்லாம் நமது பள்ளிக்கூடங்களில் ஒழுங்காய்ச் சொல்லிக்கொடுக்க வேண்டும். பிரெஞ்சு பாஷையில் பாடப் புஸ்தகங்கள் எழுதியுள்ள காம்பேர் என்பவர் எழுதுகிறார் :

"தேசபக்தி படிப்பினால் வராது" என்று சிலர் சொல்கின்றனர். இது மெய்யல்ல ; மற்றவற்றைக் கற்றுக் கொள்வதுபோல், தேசபக்தியும் படிப்பினால் உண்டாகும். தவிர, தாய்நாட்டை நேசித்தால் மாத்திரம் போதாது ; அப்படி நேசிக்க வேண்டிய காரணமும் ஒவ்வொருக்கும் விளங்கவேண்டும். அப்படிப்பட்ட அறிவுதான் தேசபக்திக்கு உறுதியான அடிப்படை." பிரான்சிய பாடப் புஸ்தகங்களை எழுதும் நூலாசிரியர்கள், உண்மையான தேசபக்தியைப் புகட்டுவதோடு, வீணான போலிப்பெருமையும் அகங்காரமும் பொறாமையும் பிற நாட்டைக்கண்டு பேராசைப் படுதலும் தவறென்றும் போதிக்கின்றனர். இன்னும் இரண்டு பாடப் புஸ்தகங்களிலிருந்து சில பகுதிகளை எடுத்துக்காட்டுவோம் : "அந்த (பகைவர்மேல் பழி வாங்கும்) நாளை எதிர்நோக்கி ஆயத்தமாயிரு" "தாய் நாட்டிற்காகப் பசிதாகம் குளிர் முதலிய கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளத் தயாராயிரு. உன் கடமையை நிறைவேற்றத் தேவையாகக் காட்டில் உயிரையே விடத் துணிந்திரு."

"போர் முனையில் அஞ்சாமையே வீரம். ஒவ்வொரு நிமிஷமும் யுத்தத்திலே வீரமும் நிலை கலங்காமையும் அவசியமாகும். விறைக்கும் குளிரிலும் பொசுக்கும் வெயிலிலும், வெடித்துப் புண்ணான

பாதங்களோடு நடந்து செல்லுதல், ஈரமான சதுப்பு நிலத்தில் பசி
தாகங்களைச் சகித்திருத்தல், இவ்விதத் துன்புகளை மனமகிழ்ந்து
ஏற்றுக்கொள்ள வேண்டும். குறை கூறுவோர் (போரில்) நல்ல
துணைவராகார்; ஏனெனில் அதைர்யம் தொற்று நோய் போன்று
பரவிவிடும்...நாற்புறமும் வெடிகுண்டுகள் அதிருகையில் குளிர்ந்த
முகத்தோடு அமைதியாயிருப்பவரை எவராலும் வெல்ல முடியாது."
இப்படிப்பட்ட போதனைகள், ஜனங்களின் மனப்போக்கை யுத்தத்
துறையிலும் வெற்றி வழியிலும் திருப்புவதில், எவ்வளவு முக்கிய
மானவை என்பது சொல்லாமே விளங்கும். ஆண்மக்கள் எல்லோரை
யும் கட்டாயமாக யுத்தமுறைகளில் பயிற்றுவதை இவை நியாயமாக்
குகின்றன; அப்படிப்பட்ட பயிற்சியினாலுண்டாகும் திறமையும்
தன்னடக்கமுமின்றி, வெறும் வீரமும் உற்சாகமும் தியாக புத்தியு
மட்டும், போர்ப் பயிற்சியுள்ள எதிரிகள் முன் பயன்படமாட்டா
என்பது தெளிவு.

பிராஞ்சியா நாட்டுப் பற்றையும், வீரத்தையும் பேணிவளர்ப்ப
தன்றி, தேசக் காப்பு முறைகளையும் வரிஇறை முறைகளையும் பற்றி
மாணவருக்குப் போதிக்கின்றனர். தன் தாய் நாட்டின் எல்லைப்
புறங்களும், அவற்றை எதிரிகள் வந்து தாக்கின் தடுத்தற்குள்ள
காப்பு விவரங்களும் ஒவ்வொருபிராஞ்சியக் குழந்தைக்கும் மனப்பாட
மாய்த் தெரியும். ஜனங்கள் வரி செலுத்தினால் தான் தேசத்தைக்
காக்கலாகும் என்பதும் அதற்குத் தெரியும். ஐரோப்பிய மகா யுத்
தத்திலே ஜெர்மானியரைப் பிராஞ்சியர் எதிர்த்துத் தாக்கிய ஈடெடுப்
பில்லாத வீரமும் கம்பீரமும் அஞ்சாமையும் தன்னுயிரைக் கருதாப்
பேராண்மையும், சென்ற ஐம்பதாண்டுகளாக இவ்வாறு பிராஞ்சியர்
பெற்றுள்ள தேசியக் கல்விப் பயிற்சியின் பலனேயாம். இத்தகைய
தேசபக்தியைப் புகட்டியதன்றி, பிராஞ்சிய ஜனநாயகர்கள், தங்கள்
பிள்ளைகள் மனங்களில், (1870-ல் தங்களை முறியடித்துத் தம்தாய்
நாட்டில் ஒரு பகுதியைப் பறித்துக் கொண்ட) ஜெர்மனியர் மீது
பகைமையையும் பழிவாங்கும் அவாவையும் வளர்த்து வந்திருக்கின்
றனர். அப்பொழுது பறிகொடுத்த பிராந்தியங்களை மீட்கும் நாளை
ஒரு கணமும் மறவாது, எதிர் நோக்கி அதற்குரிய பிரயத்தனங்க
ளைச் செய்து வந்திருக்கின்றனர். இவ்வாறு ஜெர்மானியரைத் தம்
மக்கள் வெறுக்கும்படி செய்யினும், ஜெர்மானியரின் ஊக்கத்தையும்
விடா முயற்சியையும் தற்பயிற்சியையும் மெச்சி, பிராஞ்சியர் பிள்ளை

கள் பின்பற்றுதற்குரிய சிறந்த குணங்களாக அவற்றைப் புகழ திருக்கவில்லை.

தாய் நாடாகிய பிரான்ஸை நேசிப்பதும் பகைவரான ஜெர்மானியரை வெறுப்பது மன்றி, பிரான்ஷிய தேசியக் கல்வியின் மூன்றாவது அம்சமாக, அரசாட்சியின்றிக் குடியாட்சியை நிலை நாட்டி வளர்த்தற்கேற்ற கோட்பாடுகள் போதிக்கப்பட்டன. உண்மை ஒன்றையே கருதி எழுதப்படும் சரித்திர மன்றி, தேசபக்தியைப் பெருக்குதற் கேற்ற சரித்திரம் போதிக்கப்பட்டது. இவ்வண்ணம் பிராஞ்சியர், ஜன நாயகத்தையும் வினைத்திறமையையும் ஒற்றுமையையும் சாதிச் செருக்கையுமே பெருமதித்து வளர்த்து வந்தனர். ஜெர்மானியரோ, அரசனுக்கும் குடிகளுக்கு முள்ள பந்தத்தைப் பலப்படுத்தி, அரசாட்சியை நிலை நாட்டிப் போற்று வதையும், அரசனது மகோன்னத நிலையைக் காப்பாற்றும் திறமையையுமே பரிபாலித்து வந்தனர். இங்கிலாந்திலும் (அமெரிக்க) ஐக்கிய மாகாணங்களிலும், பள்ளிகள் பாடப் புஸ்தகங்கள் மூலமாயன்றி, சரித்திரம் பூகோள சாஸ்திரங்களைப் போதிக்கும் முறையினாலும், சமூகவாழ்க்கையை ஒட்டிய வழிகளினாலும், தேசபக்தியும் நாட்டுக்கொடி வழிபாடும் தேசிய கீதத்துக்கு மரியாதையும், நேராக வன்றிச் சுற்று வழியில் போதிக்கப்படுகின்றன.

ஆசியா கண்டத்திலுள்ள நாட்டினர்களில், ஜப்பானியரும் சீனர்களும் ஐரோப்பியர்களைப் பின்பற்றி, தமது தேசியக் கல்விப்பயற்சி முறையில் தேசபக்தி புகட்டுதலையும் ஒரு முக்கிய அம்சமாகச் செய்திருக்கின்றனர். இந்தியாவிலுள்ள நாம மட்டும், இவ்விஷயத்தை அசட்டை செய்யலாமா? இந்தியாவிலே தேசபக்தியைப் புகட்டுவதிலும், இந்திய தேசியக் கல்வி முறையில் அதை ஒரு பகுதியாக்குவதிலும், முக்கியமாய் மூன்று விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

1. தன் ஊரை, பட்டணத்தை, நகரத்தை, மாகாணத்தை நேசிப்பது ஒரு புறமிருக்க, இந்தியா முழுவதையும் ஒன்றாகப் பாராட்டும் தேசபக்தியே முதலாவது. படிக்கும் போதெல்லாம் மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணும் ஸ்காட் கவியின் அழகிய பாக்களுக்கு * ப் பொருந்த, இந்த உணர்ச்சியைப் பலப்படுத்துதற்கு வேண்டிய விஷயம், ஹிந்து முகமதிய இலக்கியங்களில் போதிய அளவுண்டு. இந்திய தேசபக்தர்கள், பிறநாட்டினரை இகழ்ந்து வெறுக்கும் போலிப்பற்றை வேண்டார் என்பதுறுதி, தாய் நாட்டின் பக்தி என்றால் பிற

நாடுகளை பகைக்கவேண்டும்; அல்லது, மானிட வர்க்கத்தின் க்ஷேமத்தில் உபேக்ஷையாயிருக்கவேண்டும் என்னும் எண்ணம், முற்றிலும் தவறானது, தீங்கிழைப்பது, எங்கும் எப்பொழுதும் யாவராலும் மன்றுடி மறுக்கற்குரியது. நமது தாய் நாட்டை நாம் நேசிப்பதன் காரணம், அதுவே, அந்தபக்தி மாத்திரமே, மனிதர்க்குரிய உயர் நிலையை நாம் அடையும் கருவியாயிருப்பதுதான். இந்த நியாயம், மக்களது சமூக வாழ்க்கையைக் கவனித்தால் விளங்கும். ஸர் ஜான்ஸ் வால்ட்ஸ்டின் கூறுகிறார் :—" ஒரே குடியையும் குடும்பத்தையும் சேர்ந்தவர்களை இரத்த ஒற்றுமையால் விளையும் பாசங்கள் எப்படிப் பிணைக்கின்றனவோ, அப்படியே, ஒரே நாட்டினராக ஒரே ஆட்சியில் வாழும் மகா ஜனங்களை, அவர்கள் தாய் நாட்டின் இயற்கை நிலைமைகளும், அவர்கள் ஒருமித்து வாழும் தேசிய வாழ்க்கையும் உத்தம தர்மங்களில் நன்கு பழக்கி, மனிதர் எல்லோரையும் ஒரே குடும்பமாக மதித்து நேசித்து லோகோபகாரத்தையே நாடும் சிறந்த மானிட சேவைக்கு வழிகாட்டியாகும்.....இந்த விருத்தியை மாத்திரமன்றி, மனிதரின் நடத்தைக்கும் செயல்களுக்கும் அடிப்படையாகும் உணர்ச்சிகள் ஆசாபாசங்களையும், இத்தகைய உண்மையான தேசபக்தியானது, மேம்படுத்திப் புனிதமாக்குகின்றது."

தெளிவில்லாத உருக் கூடாத வரையறுக்கப் படாத லோகோபகாரச்சிந்தை (உலகமெல்லாம் என் தாய் நாடு என்னும் எண்ணம்.) வெகுவாய், தன்னயத்திலும் இந்திரிய சுகங்களில் ஆழ்ந்த சோம்பல் வாழ்க்கையிலும் முடியக்கூடும். தெளிவில்லாத லோகோபகாரச் சிந்தையின் பொய் வலையில் சிக்காதபடி, இந்தியவாசிகளை எச்சரிப்பது அவசியம். (சுவாதீனத்தோடு சுதந்தரத்தோடு வாழும்) ஓர் ஆங்கிலேயனோ அமெரிக்கனோ லோகோபகார விவகாரம் பேசுவது மெச்சத் தக்கதாம். (சுவாதீன மில்லா அடிமைகள் போல வாழும்) ஒரு சீனனோ ஹிந்துவோ அப்படிப் பேசுவது, தன் தேசபக்தியினால தனக்கு ஏற்படும் கடமைகளிலிருந்து தப்பித்து விலக முயலுவதேயாகும். முன்னவரின் லோகோபகாரச் சிந்தையைப் புகழ்வதுபோல, பின்னவரின் தேசபக்திக் குறையை நான் இகழுவேன். பின்னவர்கள் (இந்தியா, சீனர் போன்றவர்) தமது தேசபக்தியைப் பெருக்கித் தத்தம் நாடுகளை மற்றசுவாதீன சுதந்திர நாடுகளுக்குச் சமமான நாடுகளாக தன் உணர்ச்சியோடும் தன் மானத்தோடும் நட

---

அந்தப் பாக்கள் வருமாறு:—

" இந்த வென்சொந்த நாடே...

க்கவல்ல தேசங்களாகச் செய்துவிட்ட பின்னர், லோகோபகாரதர்மம் பேசுவது பொருந்தும். ஆரம்பப் பள்ளிகளில் நடைபெறும் பாடநூல்கள் தேசியவுணர்ச்சியையும் நாட்டுக்கு நாடுசெய்தற்குரிய கடமைகளையும்பற்றி விஸ்தரிப்பதைவிட்டு, பாரதமாதாவின் பக்தியையும், இந்தியாவிலுள்ள நதிநதங்கள், மலைகள், இயற்கை வனப்புகள், சமூக வாழ்க்கைக்காட்சிகள் முதலியவற்றையும் இனிய எளியநடையில் எடுத்துரைக்க வேண்டும். நம்முடைய இமய மலைச்சாரலைக் காட்டிலும் அழகிய மகத்தான பிரதேசம் பூமியில் மற்றெங்கும் உண்டோ? கங்கை, பிரமபுத்திரா, நருமதை, ஸிந்து இவற்றினும் கம்பீரமான மனோரம்மியமான் ஆறு, வேறுண்டோ? இயற்கை அமைப்பிலும் பழைய சரித்திர பரம்பரை மகிமையிலும் ஸ்ரீநகரம், காசி, அல்லஹாபாத், பாட்னா, லாகூர், பம்பாய், கராச்சி, மதராஸ், டில்லி, டெக்கா, இவற்றினும் சிறந்த நகரங்கள் உண்டோ? சுருக்கிக்கூறின், இயற்கை அமைப்பு வனப்புகளிலும், நிலச் செழுமையிலும் சீதோஷ்ண நிலையின் வளமையிலும் பெருமை பாராட்டுதற்குரியன எல்லாம் நம் நாட்டில் உள. மனித வாழ்க்கைக்கு உபகாரமாகும் பிராணிகளில், நம்ம பசுக்கள் காளைகளினும அழகியவற்றைப் பூமியில் வேறெங்கே காணலாம். நம்ம குதிரை ஒட்டகங்களும் நாய் பூனைகளும் செம்மறி வெள்ளாடுகளும், மற்றெவற்றுக்கும் தாழ்ந்தவைபல்ல. மரவகைகளில் அரசு அத்தி சந்தனம் தேவதாரு தேக்கு முதலிய மகத்தான விருக்ஷங்கள் இங்குண்டு. ஐம்பொறிகளுக்கும் விருந்தளிக்கவல்ல அறுசுவைக் கனிகளில், நம்ம தேசம், உலகத்திலுள்ள மற்றெல்லா நாடுகளிலும் சிறந்தது. மா, கொய்யா, ஆரஞ்சி, வாழை, மங்கோஸ்தான், திராக்ஷை, வெள்ளரி, பலா, யாவரால் எண்ணிமுடியும்? மிகச் சிறந்த பழங்களில் இத்தனை வகைகள் வேறெந்த ஒரு நாட்டிலும் கிடையா. தானியவகைகள், தைலக்கொட்டை வகைகள், இலை காய்கறி கிழங்கு வகைகள், இவற்றின் சுவைகளும தினுசுகளும் ஆச்சரியமே. சிறுகுழந்தைகளுக்காக எழுதும பாடநூல்கள், நம் நாட்டு வனப்புகளையும் வளங்களையும் ஏற்ற நடையில், விரித்து கூறவேண்டும்.

ஆனால் ஒரு நாட்டின் இயற்கை நிலைமைகளையும் பொருள்களையும் மாத்திரம பொறுத்ததன்று தேசபக்தி. நாட்டாரின் ஐக்கியப்பாட்டினாலுண்டாகும் உணர்ச்சி விசேஷங்களும், நாட்டின் சரித்திரத்தில் இணங்கிய பண்டைப் பெருமக்களையும் வீரச் செயல்களையும் பாராட்டிப் போற்றும் விசுவாசமும், பாஷாபிமானமும், பொதுவாயுள்ள பரம்பரையும், சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்களும், பிரத்தியேக

மான ஒவ்வொரு ஜனசமூகத்தின் நாகரிகத்துக்கும் ஒரு தனிச்சிறப்பையும் குணத்தையும் கொடுக்கும் இவைபோன்ற எல்லா விஷயங்களும், தேசபக்தியில் அடங்கும்.

2. ஜனங்களை ஊடறுத்து வேறுபடுத்திப் பிரிக்கும் சாதிமத பேதங்களைப் பொருட்படுத்தாமல் ஜனசமூகம் முழுவதையும் ஒன்றாக பாவித்து நேசிக்கச்செய்வது, தேசபக்தி புகட்டுவதில், இரண்டாவது படியாகும். இந்தியாவில் பிறந்த, அல்லது இந்தியத் தாய் தகப்பனுக்குப் பிறந்த, அல்லது இந்தியாவைத் தன் தாய்நாடாக்கிக் கொண்ட, ஒவ்வொருவரும் தன் இனமே; தன் சகோதரன் சகோதரியே; இதில், நிறம் சாதி மதம் தொழில்களாலுண்டாகும் வேற்றுமைகள் இல்லை என்பதை ஒவ்வொரு குழந்தைக்கும் தெளிவாய்ப் போதிக்கவேண்டும். சாதி மதம் பாஷைகளால் விளையும் வேற்றுமைகளைப் பாராட்டியே, நமக்குரிய அந்தஸ்தையும் உரிமைகளையும் அந்நியர் மறுக்கின்றனர். இந்தியாவிலே சாதிப் போராட்டமே யில்லை என்பதை ஒவ்வொரு இந்தியச் சிறுவனுக்கும் சிறுமிக்கும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக் காட்டவேண்டும். ஹிந்துவாயினும் முகம்மதியனாயினும், இந்தியன் எவனுமே, தான் பிறந்த (race) சாதியைப பாராட்டுவதில்லை. கலப்பில்லாத ஒரே சாதியைச் சேர்ந்தவர் வாழும் நாடு, உலகத்தில் ஒன்றுமே யில்லை. முற்காலங்களில் மானிட சாதியார்கள் தாராளமாய்த் தம்முட் கலந்து வாழ்ந்தமையால் இப்பொழுது நாம் கற்பிக்கும் சாதிப்பிரிவுகளும் வேற்றுமைகளும், வெறும் மனோபாவனைகளன்றி வேறில்லை. வெகுவாய் இவைகளெல்லாம், ஒருவரையொருவர் அடக்கி ஒடுக்கி ஆளவும், ஒருவர் செல்வத்தை ஒருவர் பறித்துக்கொள்ளவும், போடும் வேஷங்களேயாம்.

: : இந்தியாவில் சாதிப் போரேயில்லை. ஹிந்துக்கள் முகம்மதியர் கிறிஸ்தவர், எல்லோரும் கலப்புச் சாதிகளே. இந்தியாவின்மேல் படையெடுத்துவந்த பாரசிகர் ஆப்கானியர் துருக்கர் மொகலாயர் அராபியர்களின் சந்ததியராகும் முஸ்லிம்களின் இரத்தத்தில் ஆரிய ரத்தக் கலப்பு அதிகமுண்டு. ஆரிய ஹிந்துக்களின் இரத்தத்தில் மங்கோலிய ரத்தக் கலப்பு அதிகமுண்டு. இந்தியாவில் வாழும் ஆங்கில—இந்தியரின் உதிரத்திலோ, இவ்வெல்லாக் கலப்புமுண்டு. ஆகையால், இந்தியாவிலே சாதிப்போரைப்பற்றிப் பேசுதல் மௌட்டியமும் குறும்புமேயாகும். பாரதமாதா சாதிவேற்றுமையை அறியாள்; அதைப் பொருட்படுத்தமாட்டாள்.

ஆனால், இந்தியாவில் சமயப்போட்டி உண்டென்பதை மறுக்க வொண்ணாது. இந்த மதப் போருமதான், அதனால் லாபத்தை யடைய எண்ணி சமீப காலத்தில் சிலர் வேண்டுமென்று கிளப்பிவிட்டதேயன்றி, உண்மையானதல்ல. பண்டைக் காலத்தில், ஹிந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் மனஸ்தாபம் இருந்தது. அப்பால், சில வேளைகளில், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் மனஸ்தாபங்கள் உண்டாயின. இவை, தொலைந்து நீங்கி ஒற்றுமையும் சமாதானமும் ஏற்படும் தறுவாயில், அந்நியர்களின் தூண்டுதலினாலும், இருகட்சியிலுமுள்ள ராஜியச் சூழ்ச்சிக்காரர் கலகக்காரர் சிலரின் முயற்சியினாலும் மீண்டும் தலையெடுக்கலாயின. மதபேத மனஸ்தாபம் உண்மையானதாயிருந்த காலத்திலும், போலி மதச் செருக்கினாலும் தன்னினமே தழைத்தோங்க வேண்டுமென்னும் தவறான தேச பக்தியினாலும் உண்டானது அது. ஹிந்து ராஜாக்கள் முகம்மதியக் குடிகளையும், முகம்மதிய மன்னர்கள் ஹிந்து பிரஜைகளையும் பாரபக்ஷமின்றி ஆண்டுவந்திருப்பதும், ஔரங்கசீபின் ஆட்சிக்குப்பிறகு, ஒரு மதம் மற்ற மதத்தை தொலைக்க முயலவில்லை என்பதும் கேவலம் மெய்யாகும். ஔரங்கசீபும்தான் அப்படி முயன்றாரா? இந்தியாவின் கடந்த ஆயிரம் வருஷச் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால், ஐரோப்பாவிலே நான்கு நூற்றாண்டுகளாக ரோமன் கதோலிக் கிளை மதத்தினர்க்கும் பிராடெஸ்டெண்ட் கிளைமதத்தினர்க்கும் நிகழ்ந்த போராட்டத்துக்குச் சமானமாக, இந்தியாவில் நடந்த எதையும் எவருமே காட்டமுடியாது. பிரான்ஸில் நடந்த ஸெய்ண்ட் பார்த்தலோமியோ தினப் பெருங்கொலைக்கும், ஹாலந்து ஸ்பெயின் இத்தலி, ஜெர்மனி, பிரித்தன் அயர்லாந்து நாடுகளிலே ஒருவரை ஒருவர், வேரோடு களைந்து தொலைத்துவிட வெண்ணிக் கிறிஸ்தவ வேதிகளான கிளைச்சமயத்தார் பலர் போராடி விளைத்த கொலை பாதகங்களுக்கும், இணையாகக் கூறக்கூடிய சம்பவங்கள் இந்திய சரித்திரத்தில் ஏதேனும் உண்டோ?

நாதர் ஷாவும் தாமர்லேனும் செய்வித்த கொலைகளில், ஹிந்து முஸ்லீம் என்ற வேற்றுமை பாராட்டவில்லை. தேசத்தில் எந்த பாகத்திலேனும் ஹிந்துக்கள் எல்லாரையும் கொன்று விடும்படி எப்பொழுதேனும் ஔரங்கசீப் கட்டளையிட்டதாகச் சரித்திரம் கூறவில்லை. பஞ்சாபில் மட்டும், சீக்கியர்கள், முகம்மதியர் செய்த அழிம்புக்கு எதிரிடையாகப் பழி வாங்கின துண்டு. ஆனால், அது பொதுக் கொலையல்ல—'இருவருக்கும் பொதுவான தாய் நாடு இந்தியா, இருவர் க்ஷேமமும் முன்னேற்றமும் ஒற்றுமையையும் ஒத்துழைப்பை

யும் பொதுத்தது; மதம் என்பது, அவரவர்க்குப் பிரத்தியேகமானது, அவரவர் மனப் போக்கைச் சார்ந்தது; நாட்டின் சமூகப் பொதுவாழ்க்கைக்கும் அவரவர் மதத்துக்கும் சம்பந்தமில்லை, சம்பந்தமிருக்கக் கூடாது' என்பதை, ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இப்பொழுது அறிந்து தெளிந்திருக்கின்றனர். ஆனால், பாடப்புஸ்தகங்கள் மூலமாக, ஹிந்து முஸ்லீம் கிறிஸ்தவன் பௌத்தன் பார்ஸி சீக்கியன், ஜைன் எல்லோருக்கும் அடிப்படையாயுள்ள ஒற்றுமையையும்; இந்நாடு அனைவருக்கும் பொதுவானது; தாழ்வும் வாழ்வும் அனைவருக்கும் ஒன்று போலாகும்; ராஜிய நன்மை தீமைகளும், பொருளாதார லாபநஷ்டங்களும் எல்லோருக்கும் பொதுத் தான்; பழைய சரித்திரமும் எதிர்காலநிலைமையும் எல்லோருக்கும் பொதுவே என்னும் உண்மைகளை வற்புறுத்திப் போதிக்கவேண்டும். இந்நூல்கள், ஹிந்துக்கள் முகமதியர் இருவகுப்புப் பெரியோரின் சரித்திரங்களையும், இருவர் கீர்த்திப் பிரதாபங்களையும் எடுத்துரைக்கவேண்டும்.

அரசியலையும் பொருளாதார நிலைமையையும் பற்றிய விஷயங்கள் யாவற்றிலும், இந்தியரல்லாத அந்நியர் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும், (சாதிமத பேத வுணர்ச்சியை மறந்து ஒதுக்கிவிட்டு), ஆதியோடந்தம், எப்பொழுதும், இந்தியர்களாகவே நடக்கும்படி (முழுஇந்தியாவின் பொது நலத்தையே கருதும்படி) பாட நூல்கள் மூலமாயும் நமது சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டும். தேசபக்தி மதத்தில் நாம் அவர்களுக்குக் கற்பித்தற் குரிய மூலக்கொள்கை இது. சமயச சார்பான பள்ளிகள் கல்லூரிகள் சர்வகலாசாலைகளில்கூட இதையும் போதிக்கவேண்டும். கடவுள் அருளினால் இந்தியாவிலே ஒற்றுமையுணர்ச்சி வேரூன்றித் தழைத்து வருகின்றது. அதை அடிப்படையாக்கி, அதற்குப் பிரதி கூலமான வற்றை யெல்லாம் எதிர்த்துப் போராடி வென்று, இந்திய தேசிய மாளிகையைக் கட்ட முயலுவோமாயின், காலக்கிரமத்தில், தெய்வானுக்கிரகத்தால், நமது முயற்சி சித்தி பெறும். சிவாஜி, பிரதாபசிங், கோவிந்தசிங், அக்பர், ஷேர்ஷா, ஷாஜிஹான் முதலிய இந்தியப் பெருமக்களின் சரித்திரங்களை, உண்மையோடு முரணாமல் தேசிய உணர்ச்சியையும் தேசபக்தியையும் பெருக்குமாறும் சாதுரியமாய் எழுதினால், ஹிந்து; முஸ்லீம் ஒற்றுமை பலப் பட்டு, ஹிந்து மகான்களை முகம்மதியரும், முஸ்லீம் மகான்களை ஹிந்துக்களும் பெருமதித்து கவுரவம் செய்வர்.

இந்திய மாதா மன்முகந்து பெருமம் கொண்டாடும் பாரதபுத்திரர்களிலே, நானக்கைப்போல் சிஸ்டியும், அசோகனைப்போல் அக்ப

ரும், சைதன்யரைப் போல கபீரும், ஹர்ஷனைப்போல் ஷேர்ஷாவும், விக்கிரமாதித்தனைப்போல் ஷாஜிஹானும், தோடர் மாலைப்போல் அபுல்பாஸிலும், குஸ்ரு மௌலவி காளிப்ஸௌக் பெரிஷ்டா காளிமாத் முதலியவர்களைப்போல் வால்மீகி காளிதாஸன் துளசிதாஸ் ராம்தாஸ் சாந்த்நாஸிம கோவிந்தஸிங் முதலானவர்களும் உண்டு. இந்த நாளிலும், ஹாலி இக்பால் மொஹானிகளைப் போல் தாகூர் ராய் ஹரிஸ்ச்சந்திரர்களையும், ஸயித் ஆமத்கானைபபோல் ராம்மோகன்ராய் தயானந்தரையும் நாம போற்றிக் கொண்டாடுகிறோம்.

ஹிந்து மதத்தில் ஜாதி வேற்றுமைக ளிருப்பினும், ஜனங்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சியை வளர்க்கும் சக்தி அதற்குண்டென்று, நம் விரோதிகளுமே ஒப்புக்கொள்கின்றனர். ஜாதிபற்றி வரும் உட்பிரிவுகளை யெல்லாம் நீக்க, ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுகூடி முயல வேண்டும். ஜன சமூகத்தை ஊடறுத்துப் பிளக்கும் குறுக்குத்தட்டிகளை யெல்லாம் எடுத்தெறிந்துவிட வேண்டும். ஜாதி மத நிறபேதங்களின்றி, எல்லோரும் உட்சென்று வழிபடும் கோயில்களாக, பள்ளிக்கூடமும் கல்லூரியும் நியாயஸ்தலமும் ஆலோசனை சபையும் இலங்கவேண்டும். சமூக வாழ்க்கையிலே மற்றத் துறைகளிலும்கூட, இப்பொழுது காணும விதி விலக்குக்களைக் குறைத்து, ஒருவனுடைய மதக்கோட்பாடு அவன் மனச்சாக்ஷியைப் பொறுத்து, அம்மட்டோடு நிற்கவும், மற்ற வேற்றுமைக ளெல்லாம் அற்றுப் போகவும் வழி தேடவேண்டும். இது, தானாக நேராது; இந்த விஷயத்தில் நாம் சங்கல்பம் செய்துகொண்டு, நமது சிறுவருக்கும் சிறுமிகளுக்கும் எல்லா வித்தியாபீடங்களிலும் இதைப் போதித்து, வேண்டியபடி முயன்றால்தான் கைகூடும்.

iii தேச பக்திப் பயிற்சியில் மூன்றாவது அம்சம், நமக்கும் ராஜாங்கத்துக்குமுள்ள சம்பந்தமாகும். பிரிட்டிஷ் சக்கராதிபத்தியத்துக்குள், சுவாதீன சுதந்திரமும் பொறுப்பும் சமத்துவமும் அளிப்பதாக 1917ல் வாக்குக் கொடுத்திருப்பதையே அடிப்படையாக்கி, அந்த ஒப்பந்தத்தில் நம் கடமையை நிறைவேற்ற முயலவேண்டும், இதன் பொருட்டு, இந்தியா கவர்ன்மெண்டின் அரசியல் விவரங்களையும், ஜன நாயகத்தைப் பெருக்குதற்கு அவசியமான மாறுதல்களையும் முழுச் சுயாதீனத்தைப் பெற நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும்,

* இந்த நாமாவளி, லாலாஜிக்குத் தென் இந்தியா விஷயம் நன்கு தெரியாதென்பதை விளக்கும். பின்னால் ஒன்பதாவது அதிகாரத்தையும் பார்க்க. —மா.

மாணவர்களுக்குப் போதிக்கவேண்டும். ஹைஸ்கூல் காலேஜ் யூனிவெர்ஸிடிகளிலுள்ள உயர்தர வித்தியார்த்திகள், அரசியல் விஷயங்களையும் பொருளாதார விஷயங்களையும் பற்றி, எவ்வித நிர்ப்பந்தமுமின்றி விவாதம் செய்ய விடவேண்டும்.

ஜன சமூகத்தைத் துரைத்தனத்துக்குக் கீழாக்கும் ஜெர்மானியர் கோட்பாட்டைத் திரஸ்கரித்து, ஜனங்கள் தாம் எல்லா விதத்திலும் துரைத்தனத்தின் யஜமானர் என்னும் கொள்கையைப் பரப்பி நிலைநாட்டவேண்டும். இஷ்டப்படி துரைத்தனத்தை அமைக்கவும் மாற்றவும் ஜன சமூகத்துக்கு அதிகாரமும் சுதந்திரமுமுண்டு.

சுருக்கிக் கூறின், நமக்குள்ள ராஜவிசுவாசம் நியாயமானதாயும், புத்தியுக்திக்குப் பொருந்தினதாயும் உண்மையானதாயும் இருக்க வேண்டும். இப்பொழுது இந்தியாவை ஆளும் துரைத்தனத்தினிடம் இந்தியர்கள் விசுவாசமாயிருக்க வேண்டுமாயின், அந்தத் துரைத்தனத்தை இந்திய ஜன நாயகத் துரைத்தனமாக மாற்றும் வழியைத் தெளிவாய்க் காட்டுவது அத்தியாவசியமாகும். ஜெர்மனியின் உவமானம் இங்கே பொருந்தாது. இந்தியர்களின் விசுவாசம், பிரிட்டிஷ் பொது நாயகத்துக்குட்பட்ட மற்றப் பிரதேசங்களுக்குச் சரிசமமாய் வாழும் விருப்பத்தினால், தானாகவே அவர்கள் மனதில் உதிக்கவேண்டும்.

# பத்மாவதி சரித்திரம்--

## மூன்றாம் பாகம்.

### பதினெட்டாம் அதிகாரம்.

ஆங்கில மகாகவி ஒருவர்; சாதாரண கிறிஸ்தவர்களைப் போலன்றி, 'புனரபி மரணம் புனரபி ஜனனம்' என்னும் ஹிந்து மதக் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்; பரமாத்மப் பெருஞ்சோதியின் பொறிகளாகும் ஜீவாத்மாக்களுக்கு, குழந்தைப் பருவத்திலே ஆத்மாவின் அழிவின்மையையும், பரமாத்மாவாகிய கடவுளின் அளப்

பருஞ்சோதியையும் பற்றிய ஞாபகமும், பூர்ணஞானமும், உண்டென்றும், வயதேற ஏற இந்த ஞாபகம் குறைந்து, தெளிவுகுன்றி, மறைந்தொழிந்து போகிறதென்றும் எண்ணினவர்; தான் நேரில் இன்னும் அநுபவித்தறியாத உலக நாடக சம்பவங்களை, கலியாணமென்றும் இழவென்றும் காதலென்றும் கலகமென்றும் விளையாட்டாகப் பொம்மைகளை வைத்துத் தன் மனோரதப்படி ஆடிக்கொண்டிருந்த ஒரு குழந்தையைப் பார்த்துப் பின்வருமாறு கேட்கிறார்:—

வடிவிற்சிறிய மகாத்மாவே! பூர்வ சம்பத்தை இன்னும் வைத்துக்கொண்டிருக்கும் ஞானசிகாமணியே! குருடர்களின் நடுவே கண்ணுள்ளவனை, நித்யாத்ம சொரூப தத்துவங்களைக் கண்டு மௌனத்தில் மகிழ்வோனே! பரம ஞானியே!.........

ஆகிருதியில் சிறு குழந்தையாயினும் ஆத்ம ஞானமாம் பழந்தனம் படைத்த பெரியோய்! உன் ஆனந்த நிலையை அறியமாட்டாது, கண்மூடித் தனமாய், பின் வாழ்வில் கட்டாயம் உன் கழுத்தை அழுத்தி ஒடிக்கப்போகும் சம்சார நுகத்தடியை, இப்பொழுதே நீ இத்தனை சிரமப்பட்டு வலிய இழுத்து "இவ்வண்ணம் உன் கழுத்தின் மீது வைத்துக்கொள்வது ஏனோ? அந்தோ! உலகவாழ்க்கை நிகழ்ச்சிகள், இதோ, அதி சீக்கிரத்திலே, உன் ஆத்மாவை அமுக்கி, வழக்கமென்னும் பெரும்பாரம், பனியினும் பளுவினதாய் சம்சார சாகரமே போல் ஆழமுள்ளதாய், உன்னை நசுக்கப் போகின்றதே!"

உடுவேர்ட்ஸ்வர்த் கவியின் குழந்தைகளின் ஆத்ம ஞானத்தைப் பற்றிய எண்ணம் மெய்யாயினும் தவறாயினும், இன்பமும் துன்பமும் கலந்த மானிட வாழ்க்கையிலே, துன்பத்தினும் இன்பமே மிகுந்து காணும் சுத்தானந்தப் பகுதி என்னத்தகும் குழந்தைப் பருவத்திலே ஆனந்தத் தாண்டவமாடி அகமகிழ்ந்து வளராது, பிஞ்சிலே, வெம்பிப் பழுத்த கனிகள்போல, நம் மக்கள் உலகாநுபவ ஞானத்தையும் கவலைகளையும் தாங்கித் தளர்வது தகாதென்பதில் சந்தேகமில்லை. உயிர் நூலார் குரங்குகளோடு சேர்த்துப் பாகுபடுத்தும் மனிதனுக்கு, குரங்கைப்போலக்கண்கண்டதைக் கைசெய்து பார்க்கும் சுபாவமிருப்பதே, இதன் முக்கிய காரண மென்னலாம். வீட்டிலும் வெளியிலும் மூத்தோர் செய்யும் கருமங்களை இளையோரும் செய்ய முயலுவதும், மூத்தோர் அறியாமல் இளைஞர் தமக்குள், தம்புத்திக்கு எட்டியமட்டும், அவற்றைப்பற்றி விசாரிப்பதும், இயற்கைச் சுபாவமே. நமது பெண்மக்கள், முற்காலத்தைக் காட்டில் சீக்கிரமாக

இக்காலத்தில் பெரியவராகி விடுவதன் காரணம், நமக்குள் நடைபெறும் பாலிய விவாகங்களும், கலியாணம்திரட்சி, சீமந்தம், பிரசவம்,முதலிய விஷயங்களைப்பற்றி வீட்டில் மூத்தோர் பேசுவதைக் குழவிப் பருவம் முதலே குழந்தைகள் கேட்டுக் கேட்டுச் சிந்திப்பதுமே, என்று, சிலர் கூறுகின்றனர். இளமைப் பருவத்துக்குப் பொருந்தாத விஷயங்களை இளையோரா கேட்கப் பார்க்க, முதியோர் பேசவும் செய்யவும் கூடாதென்பது தெளிவு , ஆயினும், நம்முள் மிகப் பல குடும்பங்களில் இது கவனிக்கப் படுவதில்லை என்பதும் மெய்யே.

நாராயணையர் மகன் சீதாபதி என்ற சீது என்ற ராஜாவும், கோபாலையர் மகன் சேஷன் என்ற சாமியும் கோபாலையர் வீட்டு மாடி வராந்தாவில் வாசித்துக் கொண்டிருந்தார்கள். கோபாலையர் மகள் மகாலக்ஷ்மி என்ற எச்சு என்ற குட்டி, ஒரு மூலையில் பலவர்ணப் பென்சில்களையும் பூகோள சாஸ்திரப் படங்கள் அடங்கிய படப்புஸ்தகத்தையும் ஒரு பாயின் மேல பரப்பி, அவைகளின் மத்தியிலே முழங்கால் முழங்கைகளை ஊன்றித்தவழும் நிலையில் குனிந்தவண்ணமாய் இந்தியாவின் படத்தை வரைந்துகொண்டிருந்தாள். அவள் வாய் மட்டும்.

"அத்தை வீட்டுக்குப் போனேன்;
பொத்தைப் பானையைத் தந்தாள்;
அவல் இடிக்கலாம் பொரி பொரிக்கலாம்,
அத்தையைக் கண்டால் டஸ்!
பாட்டியைக் கண்டால் டஸ்!"

என்று, ஏதோ பாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது, அவள் தமையன் சாமி, "சூ! டஸ்ஸு-மாச்சு, புஸ்ஸு-மாச்சு: பாட்டை நிறுத்து குட்டி; கணக்கு ஓடமாட்டேன் என்கிறது,| நீ போடுகிற சத்தத்திலே" என்றான்.

நம்முடைய வாசகர்களுக்கு இந்தக் குழந்தைகளை இன்னும் நன்கு தெரியாததால், அவர்களைப் பற்றி இரண்டொருவார்த்தைகள் இங்கே சொல்வது பொருந்தும். சாமிதான் மூவரிலும் மூத்தவன்; இப்பொழுது அவனுக்கு வயது பதின் மூன்று நடக்கிறது. 'குட்டிக் கோபாலன்' என்றால் முற்றும் பொருந்தும். குட்டி, இரண்டு வயதுக்குச் சின்னவள்; கலியாணியின் மகள் என்பதை அவள் கண்கள் பறையறைகின்றன; ஆனால்,வயதுக்குத் தக்க வளர்ச்சியும் உலக ஞானமுமில்லாமல் குழந்தைத்தனமாயிருக்கிறாள்: அரையில் பாவாடையைத் தவிர வீட்டிலிருக்கும பொழுது இன்னும் மேலாடை தரிப்பதில்லை. சிவநது மெலிநது எட்டொன்பது வயதுக்

சிறுமிபோலிருக்கிறாள். ராஜா, சாமிக்கு ஓராண்டுக்குச் சின்னவன். சாமியளவு கறுப்புமில்லை. குட்டியளவு சிவப்புமில்லை; மாநிறம்; பூசி விட்டாற் போன்ற சரீரம்; நமது கதா நாயகியின் முகக்களை அவன் முகத்திலும் ஜொலிக்கின்றது. மூன்று குழந்தைகளின் தலைமயிர்களும வாரிப் பின்னித் தொங்குகின்றன. குட்டியின் பின்னல் நுனி, அதிகம் குனியுந்தோறும் படத்தில் படுவதால், அவள், குதிரைக் குட்டியைப்போலத் தன் தலையைச் சிலிர்த்து ஆட்டி, பின்னல் முதுகின்மேல் போகும்படி செய்கிறாள்.

சாமி சொன்னதைக் கேட்டுக் குட்டி ஒரு நிமிஷம் வாய்மூடிக் கொண்டிருந்தாள். அடுத்த நிமிஷத்தில், தான் அறியாமலே'

"பூமாதேவி மூசம்போலும் இந்தப்
புண்ணிய நாட்டுக் கும்மிபாட,
காமகன்! நல்ல தமிழ் தருவாய்; எந்தன்
நாவினில் வந்து நடம்புரிவாய்!"

என்று, அவள்வாய் மீண்டும் பாடத் தொடங்கிற்று.

சாமி.—கனக்கு ஒடவில்லை, சும்மா இரு என்கிறேனே. தோல் வாயா? சும்மா சளம்புகிறயே.

குட்டி.—சவுக்காலே நாலறை கொடு, அப்புறம் ஓடும். இதோ பார், அண்ணு! என் மாப்பை: அச்சுப்போலே, டாய் விழுந்திருக்கு.

ராஜா.—பார்த்தெழுதினையோ? எண்ணெய்த் தாள் வைத்து வரைந்ததோ?

குட்டி—வாத்தியார் பார்த்துத்தான் எழுதச்சொன்னார். ஆனல் எல்லாக் குட்டிகளும் எண்ணெய்த்தாள் வைத்து வரைந்துதான் கொண்டுவரதுகள், நான் மட்டும் பார்த்தெழுதிக்கொண்டு போனல், மார்க்கு கோழி முட்டைதான் கிடைக்கும்.

இதைக் கேட்டவுடன், நாராயணையர் மகன் ராஜாவுக்குக் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது: "உனக்குப் படம் வரையத் தெரிய வேணுமோ? மார்க்கு வேணுமோ? இப்பவே முதல். பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கள்ளத்தனமா படிக்கிறாய்? உங்க ஸ்கூலிலே முக்கால் வாசிப்பேர் கிறிஸ்துவக்குட்டிகள்; நீயும் கிறிஸ்துவச்சியாகிறுபா"? என்று கேட்டான்.

சாமி—ஒருவேளை எங்கபயா கிறிஸ்தவராணுக்கால், நாங்களும் கிறிஸ்தவராக வேண்டி வருமோ என்னவோ,

குட்டி—நம்மப்பாவா? சீ! ஒருநாளும் அவா கிருஸ்துவராகமாட்டார். அவரென்னத்துக்கு கிருஸ்துவராகப் போகிறார்? அத்தைதான் சொன்னாளே.

சாமி—அத்தை என்ன சொன்னாள்.

குட்டி—அத்தையும் பத்மாவதி அம்மாமியும் பேசிக் கொண்டிருக்கிற போது, "எத்தனை பேர் கிருஸ்துவ வேதத்திலே இதுநாளிலே சேரவில்லை. எப்படியாவது சந்தோஷமாயிருந்தால், இன்னும் கெட்டுப் போகாதேயிருந்தால் நல்லது தானே" என்று அம்மாமி சொன்னார். அதற்கு அத்தை, "என்னவானாலும் சரி, அம்பி ஒரு நாளும குழந்தைகளைச் சந்தியிலே நிறுத்திவிட்டு, கிருஸ்து வேதத்திலே சேரமாட்டான்." என்று சொன்னாளே.

ராஜா.—யண்டா சாமி, ஒரு வேளை மாமா கிருஸ்துவரானால், நீயும் கிருஸ்துவனாகி, தலையெல்லாம் க்ராப்பு செய்துகொண்டு பூணூலை அறுத்தெறிந்துவிட்டு, ஆடு கோழியெல்லாம் தின்ன ஆரம்பித்து விடுவாயோ?

சாமி—என் ப்ராணன் போனாலும் சரி, ஒரு நாளும் நான் அப்படியெல்லாம செய்யமாட்டேன். எங்கப்பாவும் அப்படிச் செய்ய மாட்டார்.

ராஜா.—உங்கப்பா சங்கதி உனக்கெப்படித் தெரியும்? நீ எப்படிச்சொல்லுவாய்? உங்களை என்ன செய்யப்போகிறாரோ, அது எனக்குத் தெரியாது; ஆனால் உங்கப்பா மாத்திரம், அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்குள்ளே, கிறிஸ்தவராகி, ஒரு கிறிஸ்துவச்சியையும் கலியாணம் செய்து கொள்வது நிச்சயம்.

சாமி.—உனக்கெப்படி இவ்வளவு நிச்சயமாய்த் தெரியும்?

ராஜா.—ஒரு கெவுளி சொல்லிற்று என்று வைத்துக் கொள்ளேன்.

சாமி.—கெவுளியு மாச்சு கிவுளியு மாச்சு! இது ஒரு நாளும் நடக்கப் போகிறதில்லை. நான் வேணுமானால் பந்தயம் போடுகிறேன்.

ராஜா.—என்ன பந்தயம்?

சாமி.—என்ன பந்தயமா? நாலணா பந்தயம்.

ராஜா.—சரி; நமக்கு இன்னும் ஒரு வாரத்திலே கால் ரூபா கிடைக்கப் போகிறது

சாமி.—நடக்காவிட்டாலோ?

ராஜா.—நான் அரை ரூபா தருகிறேன்.

சாமி—எதைக் கொண்டு இவ்வளவு நிச்சயமாய்ப் பேசுகிறாய் நீ.

ராஜா—சொன்னால் பந்தயம் மாறமாட்டாயா?

சாமி—ஒரு நாளும் மாறமாட்டேன். இப்பவே வேணுமானா லும் நாலணாவையும் தந்துவிடுகிறேன். எதனால் சொல்லுகிறாய்?

ராஜா—குட்டிக்குத் தெரிந்தால், ஏதேன் உளறிவைப்பள் கிட்டவா, காதோடு சொல்லுகிறேன்.

இதைக் கேட்டவுடன் குட்டியும் பாவை விட்டெழுந்து, ராஜா வினிடம் ஓடிப் போனாள். அவள் வருவதைக் கண்டு, ராஜாவும் சாமி யும் அறைக்குள் ஓடித் தாளிட்டுக் கொண்டார்கள்.

"எனக்கும் சொல்லப்படாதா? நான் ஒருத்தரிடத்திலும் சொல் லவேயில்லை" என்று, குட்டி கதவைத் தட்டிக்கொண்டு நின்றாள்.

அப்பால் கதவு திறக்கப்பட்டது, இதற்குள் "ராஜா! ராஜா! உயு ரச்சீதை உங்களோடிருக்காளா?" என்று பத்மாவதியம்மாள் தன் மக னைக் கீழிருந்து விசாரித்த குரல் கேட்டது.

"சீதை இங்கில்லையே, அம்மா" என்று ராஜா பதில்சொன்னான்

"ஆத்திலும் இல்லை; இங்கே வந்திருக்காளாக்கும் என்று தேடி வந்தேன்; உங்களோடில்லை என்றால் வேறெங்கே போயிருப்பாள்? என் அப்பன் அன்றோ நீ: ஒரு ஓட்டத்திலே ஓடிப் போய், ஒரு வேளை மாடியிலே அப்பா அறையிலே இருக்காளோ என்று பார்த் துக் கொண்டு வரமாட்டாயா? " என்றாள் பத்மாவதியம்மாள்.

"இதோ வந்தேன்", என்று சொல்லி ராஜா ஒரு குதியில் ஓடிப் போய்விட்டான்;

ராஜா போனபின்பு குட்டி தன் தமையனை நோக்கி: "ராஜா என்ன சொன்னான், எனக்கும் சொல்லமாட்டாயா, அண்ணா? உன் முகத்தைப் பார்த்தால் என்னவோ போலிருக்கே; எனக்குப பயமா யிருக்கு; அழுகை வருகிறது. எனக்குச் சொல்லேன் " என்றாள்.

சாமி—இப்பவே அழுகை வருகிறதென்றால், உன்னிடத்திலே எபபடிச் சொல்கிறது?

குட்டி—இல்லை, நான் அழவில்லை; என்ன சொன்னான் சொல்லு.

சாமி—பத்மாவதி அம்மாமி யிடத்திலே மாமா ரகசியமாய்ச் சொன்னாராம்: இவனுக்கும் கேட்டதாம். இவன் மறைவிலே வாசித் துக் கொண்டிருந்தது மாமாவுக்குத் தெரியாதாம்.

குட்டி—என்ன சொன்னாராம்?

சாமி—நம்ம அப்பா கிருஸ்துவராகிக் கலியாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாராம. வியாழக் கிழமையாவது வெள்ளிக் கிழமை

யாவது நடக்கப் போகிறதாம். இது—இந்த ஊரிலே இல்லையாம்; வேறு எந்த ஊருக்கோ போகப் போகிறாராம்.

குட்டி—அத்தையிடத்திலே சொல்லமாட்டாரா? அத்தைக்குத் தெரிந்திருக்காதா, இது ஜமானால்?

சாமி—இன்றைக்குத் தான் முடிவாய்த் தீர்மானம் பண்ணினாராம். நேற்று சாயங்காலம்கூடப் பேச்சு நடந்ததாம்; அப்படியொன்றுமில்லை, நடவாது என்று சொல்லிக் கொண்டார்களாம்.

இதைக் கேட்டவுடனே சிறிது தியங்கி மயங்கி நின்று, அப்பால் தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு: "ஓ அண்ணா! அப்புறம் நாம்என்ன செய்வோம்?" என்று குட்டி அழத்தொடங்கினள்.

சாமி—பார்த்தாயா பார்த்தாயா இதுதான் உன்னிடம் சொல்லக் கூடாதென்கிறது. நான் அழுகிறேனோ, பார்.

குட்டி.—உனக்கு—உனக்கென்ன, நீ நீ பெரியவன்-அப்பா ஒரு கிறிஸ்தவச்சியைக் கலியாணம் பண்ணிக்கொண்டு வந்தால் எங்க வாத்திச்சிமாதிரி, அவள் என்னை அடிப்பாளோ, என்னவோ— நான் எங்கேயாவது, செங்காட்டுத் தாத்தா ஆத்துக்கு, ஓடிப் போய் விடுகிறேன். எனக்கு பயமாயிருக்கு. நான் அத்தையிடம் போய்ச் சொல்லப் போறேன்.

சாமி.—அத்தை என்ன செய்வாள்? இப்பவே அடிக்கடி அழுதுகொண்டிருக்கிறாள்; இன்னும் அதிகம் அழுவள்.

குட்டி.—அத்தை படாது என்று சொன்னால், அப்பா கேட்கமாட்டாரா?

சாமி.—அதெல்லாம் நடவாது. இதுவரையும் நித்தியம் நித்தியம் சொல்லிக்கொண்டே இருக்கவில்லையா? அதெல்லாம் பிரயோசனமில்லை. எனக்கு ஒரு யுத்தி தோணுகிறது: அந்தப்படி செய்தால், ஒரு வேளை, இது நடவாமற் போகலாம்.

குட்டி.—என்ன யுக்தி? நீ என்ன செய்வாய்? அப்பாவிடம் சொல்லுவாயா?

சாமி.—இதைப் பற்றி எப்படிச் சொல்லுகிறது, பேசுகிறது; அது முடியாது.

குட்டி.—பின்னே, வேறென்ன யுக்தி?

சாமி.—ராஜா திரும்பி வரவிட்டு, அவனிடம் யோசித்துக் கொண்டு, அப்புறம் சொல்லுகிறேன். அதற்கு நீயும் சேரவேணும். உன் கையெழுத்தும் வேணும்

குட்டி.—அதற்கென்ன, நூறு கையெழுத்து வேணுமானாலும்

போடுகிறேன். அப்பாவுக்கு இதைப்பற்றிக் காகிதம் எழுதப்போகிறாயா ?

சாமி.—அப்புறம் சொல்லுகிறேன் என்கிறேனே. அதுவரை, அத்தையிடம் நீ ஒன்றும் சொல்லாதே. நான் சொல்லிக்கொள்கிறேன். அத்தையையும் கேட்டுத் தான் செய்யவேண்டும்.

குட்டி.—அப்பா ஏது இன்னும் வரவில்லை? நித்தியம் இதற்கு முன் வந்துவிடுவாரே.

சாமி.—ஆஸ்பத்திரியிலே ஏதாவது அதிக வேலையிருக்கும்.

குட்டி.—வேறு எந்த ஊருக்கோ போகப்போகிறார் என்றாயே; ஒரு வேளை போய் விட்டாரோ என்னவோ?

சாமி.—ஆத்திலே அத்தையிடம் கூடச் சொல்லாமலா போய் விடுவார்? காலையிலே காப்பிசாப்பிட்டு விட்டு மாமா ஆத்துக்குப்போனார்; அங்கிருந்தே ஆஸ்பத்திரிக்குப் போயிருப்பார். அதோ, சைகிளில் மணி கேட்கிறது. வந்துவிட்டார்.

சற்று நேரத்தில் டாக்டர் கோபாலையர், தன் உடைகளை மாற்றுவதற்காக மாடிக்கு வந்தார். வந்தவர், தன் குழந்தைகளின் முகங்களைப் பார்த்தவுடன் திடுக்கிட்டார். அவர்களும், வழக்கம் போல் அவரிடம் பேசவில்லை. எப்பொழுது அவர் வெளிச்சென்று திரும்பினாலும், என்ன விசேஷம் நடந்தது, ஏன் இவ்வளவு நேரமாயிற்று, எந்த எந்த நோயாளிகள் புதிதாக ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள், என்பதெல்லாம் தூண்டித் துளைத்துக் குட்டி கேட்பது வழக்கம். இன்றோ, பேசா மடந்தைபோல், அவள் தலையைக் கவிழ்ந்து கொண்டு நின்றாள். சாமியும், அவரைக் கண்டவுடன், ஏதோ ஒரு புஸ்தகத்தில் ஆழ்ந்திருப்பவன் போலப் பாசாங்கு பண்ணினான். குற்ற முள்ள நெஞ்சு குறுகுறுக்கு மன்றோ! இப்படித் தன் குழந்தைகள் புது மாதிரியாயிருப்பதைக் கண்ட கோபாலையர், தானும் ஒன்றும் சொல்லமாட்டாதவராய், திகைத்துத் தியங்கினார். அப்பால் தன் உடைகளைக் களைந்து ஒரு தட்டு வேஷ்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு, கீழே பாய் மீது கிடந்த படத்தைப் பார்த்து, "நீ எழுதின படமா இது, சாமி? எடுத்துப் பத்திரமாய் வைக்காமல் கீழே போட்டிருக்கிறாயே" என்றார்.

சாமி.—என் படமில்லை. குட்டி படம்; இப்பொழுது தான் எழுதினாள். இன்னும் காயவில்லை.

கோபா.—இங்கேவா குட்டி; அந்தப் படத்தை எடு பார்ப்போம். உனக்கு இவ்வளவு நன்றாகப் படம் எழுதத் தெரியுமா கண்ணே ?

குட்டி.—ஆட்லஸ் படத்தின் மேலே வைத்து வரைந்தேன், அப்பா.

கோபா.—அப்படிச் சொல்லு. உங்கள் கூலியிலே, அப்படியா படம் வரையச் சொல்லுகிறார்கள்?

குட்டி.—இல்லை, அப்பா; வாத்தியார் பார்த்துத்தான் எழுதச் சொன்னார். மற்றப் பெண்கள் எல்லாரும் இப்படித்தான் எழுதிக் கொண்டு வருகிறார்கள்; நானும் அதுபோல வரைந்தேன்.

கோபா.—வாத்தியாரை ஏமாற்றுகிறதா?

குட்டி.—இல்லை, அப்பா. அவருக்குத் தெரியாதா என்ன? இன்ஸ்பெக்டர் வரப் போகிறாராம்: அதற்காக, எல்லாக் குட்டிகளையும் அச்சுப்போல சில படங்கள் எப்படியாவது எழுதிக்கொண்டு வரச்சொல்லி யிருக்கிறார்.

கோபா.—ஆனால், வாத்தியாரை நீங்கள் ஏமாற்றவில்லை; இன்ஸ்பெக்டரை அவர் ஏமாற்றுகிறார் என்கிறாயா?

குட்டி.—போ, அப்பா; அதெல்லாம் எனக்குத் தெரியாதா.

[பத்மாவதி சரித்திரம் இவ்வளவுதான் எழுதி முடிந்திருந்தது. இந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி குழந்தைகள் எழுதின கடிதத்தைக் கண்டு கோபாலர் கடைசியில் ஜேன் ஸ்மைலைக் கலியாணம் செய்துகொள்ளவில்லையென்றும், மெஸபொடேமியாவுக்குப் போய் அங்கிருந்து உடம்பு கெட்டுத் திரும்பி வந்தாரென்றும், நவநாகரிகத்துக்கு ஏற்ப பத்மாவதியம்மாள் குடும்ப சம்பவங்களை விவரித்தும் கதையை எழுதி முடிக்கப் போவதாக என் தகப்பனார் சொல்லிக் கொண்டிருந்தார். மா. அனந்தநாராயணன்.]

—o—

## "கண்ணன் பெருந் தூது."

5 பிராமண ஸ்திரீகள் சூரியோதய காலத்தில் தாமிரவருணி நீராடிக் கரை யேறினர். அவர்களில் நால்வர்—மீனு, அம்மாளு, ஆனந்த வல்லி, திருவி—நடுப் பிராயத்தினர்; மீனுவின் மருமகள் மாத்திரம் பன்னிரண்டு வயதுப் பெண். ஐவரும் ஈரப் புடவைகளையே உடுத்தியிருந்தனர், மருமகளின் தோளில்மட்டும் ஈரரவிக்கையும் தொங்கிற்று. மூத்தவர்கள் நமஸ்கார ஜெபம் செய்தனர். பிறகு, பளிச்சென்ப் பிரகாசிக்கும் பித்தளைக் குடங்கள், செப்புச்

செப்புகள், ஸ்தாலிகளில், கருப்பஞ்சாறு போன்ற ஆற்றுநீரை மொண்டுகொண்டு, பிராமண களை ஜொலிக்கும் முகத்திலே கன்னத்து மஞ்சளும் நெற்றிக் குங்குமமும் இலங்க ஊரை நோக்கிப் புறப்பட்டனர். எந்த ஊர் அது? நம்மாழ்வார் **"மாடக் கொடி மதிள் தென்குளந்தை"** என்று பாடிய ஊரே. ஆற்றிலிருந்து வடக்கே ஏறத்தாழ இரண்டு மைல் தூரமுண்டு. வழியோ ராஜபாதை: எல்லோருக்கும் பொது. "தீண்டாச் சாதியர்" எதிரே வருவோர் பலர் தாமே விலகுவர்; சிலர் விலகார், இவர்கள் கெஞ்சி வேண்டியும் அவர்கள் விலகாவிட்டால், ரோட்டின் இருபுறமுமுள்ள வயல் வரப்புக்களில், இவர்களே ஓடி விலகிக்கொள்வர்; "நாசமாய்ப் போவாய்!" "படக்கென விழுவாய்!" என்று அவர்களைத் திட்டவும் செய்வர். இவ்வாறாக, கிரகலக்ஷ்மிகள் ஐவரும் அதிகாலையில் தம்மூருக்குத் திரும்பிவரு காட்சியானது, தற்காலத்தில் நடைபெறும் வைதிக தருமத்தின் நன்மை தீமைகளை ஒருசேர விளக்கிற்று என்னலாம். இது நிற்க; இவர்கள் சம்பாஷணைகளுக்குச் சிறிது செவி கொடுப்போம்:

**திருவி.**—என்டி மீனு! ஆறுமங்கலத்து எக்கம்மாப் பாட்டிட்டே, நீ கிஷ்ணன் தூது சொல்லிக் கொண்டேன் இன்னையே; அதைக் கொஞ்சம் சொல்லேன், கேட்பம். வழியும் தொலையும், புண்ணியமு முண்டு.

**மீனு.**—ஆகா, அதுக்கென்ன சொல்றேன். நன்னத் தெரியாவிட்டாலும்; தெரிஞ்ச மட்டும் சொல்றேன்.

**ஆனந்தவல்லி.**—கிஷ்ணன் தூது இன்னுக்கா? அதென்ன பாட்டு?

**திருவி.**—அடிஜடமே! இதுகூடக் கேட்டதில்லையா? பாரதத்திலே கிருஷ்ணன் இருக்காரே தரும புத்திரருக்காக, துரியோதனராசாட்டே தூதுபோகலையா அதைத் சொல்ர பாட்டு.

**ஆ. வல்லி**—அப்படியா, சரி, சொல்லு, மீனு, கேட்பம்.

**மீனு**—சொல்லட்டுமா?

**"கண்ணன் பெருந்தூது சேனாய் நீ சரிகையே,"**

என்டி அம்மாளு! உங்காத்துக்காரர் அல்லிக்குளத்துக்குப் போயிருந்தார் பின்னையே வந்துட்டாரா?

**அம்மாளு**—நேத்தி ராத்திரிதான் வந்தார். கோவில்லே கூடச் சங்கூதி, ஊரடங்க விட்டு வந்தார். ஆத்திலே சாதங்கூட மிச்சமில்லை அடுத்தாத்து சேஷியை எழுப்பி, ஒரு சொடுத்தலை சாதம் வாங்கித்

கொணர்ந்து போட்டேன். படுத்துக்கரபோது பத்து நாழிக்கு மேலாச்சு.

ஆ. வல்லி—அப்படியா சரி, சரி, அதுதான் இன்னிக்கு அம்மாளுகூட ஆத்தங்கரைக்கு விடிக்காலம் குளிக்க வந்துவிட்டா!" இதைக் கேட்டவுடன், அம்மாளு வெட்கப்பட்டுத் தலைகுனிய மற்றவர் சிரிக்க, மருமகள் ஒன்றும விளங்காமல் விழித்தாள்-சிரித்து முடிந்த பின்.

திருவி.—எப்பவும ஆந்து வலிக்கு இந்தக் குறும்பு தான் வேறொன்றும் தெரியாது. நீ பாட்டை சொல்லு மீனு.

மீனு.—எங்கே விட்டேன்? ஆமாம்:

"கண்ணன் பெருந்தூது சேனாய் நீ காரிகையே!

ஆந்து வலி! நீ மாத்திரம், 'ங்காத்துக்காரர் ஊரிலே இல்லாத போதுகூட, குல சேகரன் பட்டணம் போயிருக்கிற போது கூட, நித்யம் வெடியக்காலம, ஆத்தங்கரைக்கு வரையே. அதென்ன?

அம்மாளு.—அப்படிக் கேளு! அவள் குறும்புக்கு நீதான் சரி!

மீனு.—போருமடி யம்மா! உனக்கு வேண்டி வந்ததுக்கு, என்னையும் குறும்புக்காரி என்கிறாய் .கரும்! இது தான், இந்தக் காலத்திலே நல்லதொன்னும் ஆகாதென்கிறது.'

கண்ணன் பெருந்தூது சேனாய் நீகாரிகையே!

மருமகள்.—அதென்ன, "காரிகையே!" இன்னு, ஆரைப்பாத்து ஆரு சொல்லரா? என்று, மெதுவாய்த் திருவியிடம் கேட்க—

திருவி—இதோ, உன் நாட்டுப் பெண் கேக்கரதுக்குப் பதில் சொல்லு, மீனு.

மீனு—என்ன கேட்கிறாள் அவள்?

திருவி—'காரிகையே!' இன்னு, ஆரைப்பாத்து ஆரு சொல்லற பாட்டிது, இன்னு கேட்கிறா.

மீனு—அவளைப் பார்த்து நான்தான் சொல்லரேன் இன்னிருக்கட்டுமே.

திருவி—சரி, சொல்லு; இன்னமே ஆராவது நடுவிலே பேசினா, எனக்குக் கோபம் வரும் பாத்துக்குங்கோ. ஆமபோரத்துக்குள்ளே பாட்டு முடிய வேண்டாமா என்ன? சொல்லுடி, மீனு.

மீனு—நான் சொல்லிண்டே மட்டிலே, ஆம்போரதுக்குள்ளே முடியாதா என்ன?

திருவி—மேலே சொன்னா இன்னடி முடியும். வெறும்மென ஒரே பல்லுவத்தைச் சொல்லிககொண்டிருந்தா முடியுமா?

மீனு—மேலே சொல்லறேன்:

கண்ணன் பெருந் தூது கேளாய் நீ காரிகையே.

அடே! அடே! இன்னம் இரண்டடி தள்ளிக்கோடா! உனக்குக் கோடிப் புண்ணியமுண்டடா! நீ நல்லவனுச்சே! பச்சை அமேத்யம் இன்னு! பழம்பாத ரகையுயின்னு! கொஞ்சம் தள்ளிக்கோ, அப்பா.

வழிப்போக்கன்:—போ, பாப்பாத்தி, ஓரமாய்ப்போ. இன்னம் எங்கேபோய் விளச்சொல்றுய்?

திருவி.—அடமுழிவாய்! கொள்ளையிலே போக நீ! இன்னம் நாலடி தள்ளிக்கப்படாதா? காலிலே முள்ளுத் தெச்சுடுத்தே, இதோ! மீனு, இந்தமுள்ளைப் பிடுங்கும்.

வழிப்போக்கன்.—என், பாப்பாத்தி! அந்தக் கொள்ளை உனக்கு வாரதோ?

மீனு.—ரத்தம் வந்துடுத்து; இன்னமேப் பயமில்லை. எதுக்கும், ஆதுதுக்குப் போனுடனே, துளி சுண்ணும்பைவச்சு, அந்த வாயை அடச்சுடு. கடுக்கிறதா?

திருவி.—இல்லை, கடுக்கலே. இன்னிக்கு ஆருமுகத்திலே முழிச்சேனே, வெள்ளிக்கிழமையும் தாஹும், ரத்தக் கோறைக்ண்டிருக்கு.

ஆ-வல்லி.—ஒத்தரும் பேசப்படா தின்னுட்டு நீ மாத்திரம் பேசலாமாக்கும்?

திருவி—ஆமாண்டி, உனக்குத் தெச்சால் தெரியும்; எவ்வளவு [illegible]த, எவ்வளவுநீளம் முள்ளு!

ஆ. வல்லி—சரி, கிடக்கிறது குறைப் பாட்டை சொல்லு மீனு.

மீனு—எதிலே விட்டேன்? ஆமாம்:

கண்ணன் பெருந்தூது கேளாய் நீ காரிகையே!

இவன் யாரோ நட்டத்திச் சாணன் போலிருக்கு: நம்மூரா யிருந்தால் இப்படிச செய்யமாட்டான்,

அம்மாளு—அவன்தான் விலகிண்டானே.

திருவி—வசா, அவனும் பதில் வசான்

திருவி—ஆமாம், நான் வசேன், மீனு மாத்திரம் வாழ்த்தினு ளாக்கும்;

மீனு—எல்லாம வார்த்தை நைசசியத்திலிருக்கு பசுபோல பிராமணன் இன்னுலும் ஒன்னுதான் மாடுபோல பிராமணன் இன்னுலும் ஒன்னுதான். அதிருக்கட்டும்; பாட்டை சொல்லறேன் கேளுங்கோ;

கன்னன் பெருந்தூது கேளாய் நீ காரிகையே

ஏண்டி, ஆந்துவலி கண்ணான் இன்னுத் தெரியுமோ உனக்கு?

ஆ. வல்லி.—உன்னம பிடடுத தெரியாட்டாலும், ரொம்பத் தானே எளப்பம் பண்ணுதே-கண்ணன் இன்னுத் தெரியாதா என்ன?

மீனு,— ஆரு, சொல்லு: உங்காத்துப் பள்ளன், மூக்கன் தம்பியா?

திருவி.—இல்லாவிட்டா, மிராசுதாராத்துப் பண்ணைக் காரன் கண்ணனு?

ஆ. வல்லி.—ஆமாண்டி யம்மா, உங்களுக்கெல்லாம் நான் எளப் பம் தான். உங்களம் பிட்டுபா—பேசத்தெரியாது எனக்கு; நீங்கள் என்ன வேணுமென்னுலும சொல்லுவேள்.

மீனு.—இதெல்லாம் என்னுத்துக்கு? கண்ணன் இன்னு ஆரின்னு சொல்லிடேன் பார்பபம்.

ஆ. வல்லி.—நான் பயித்தாரியா இருந்தா இருந்துட்டுப் போரேன். நீங்க் இம்பிட்டுச் சொல்ல விட்டு, நான் சொல்லவே மாட்டேன்.

அம்மாளு.—கேக்கேலோ! மாக்கோலம்! தெரியாது; அது தான் இப்படிச் சொல்லுறாய்.

ஆ.வல்லி—சரி, அப்படியே இருக்கட்டும். பாட்டை [illegible] சொல்லு. மீனு; அதோ, தெருவந்துட்டுது.

மீனு—

கண்ணனை பெருந் தூது போனாய் நீ காரிகையே!

இதோ ஆம் வந்துட்டுது. இன்னொரு நாளைக்குக் குறையும சொல்லறேன்.

# சித்திரக் கலையின் சிறப்பு.

சித்திரம் அல்லது ஓவியம் என்பது, சிற்ப சாஸ்திரத்தின் ஒரு பகுதி; அதன் மற்றொரு பெரும் பகுதி, பதுமைகளைச் செய்தல். சித்திரங்களுக்கும் பதுமைகளுக்கும் உள்ள முக்கிய பேதம், சித்திரங்களுக்கு, நீளமும் அகலமும் மாத்திரமுண்டு, பதுமைகளுக்கோ கனமுமுண்டு; அதாவது: சித்திரங்கள், காகிதம், துணி, சுவர், பலகை, தோல், முதலிய வஸ்துக்களின்மீது வரையப்படும்; பதுமைகளோ, மரம், சிலை, உலோகம், மண் முதலிய வஸ்துக்களைக்கொண்டு உருவங்களாகச் செய்யப்படும். ஒரு கவி,

"மண்ணில் மலையில் மரத்தில் எழுதாதே தன்
கண்ணில் எழுதினவ காபதேரம்"

என்று ஒரு பெண்ணை வருணித்திருப்பது, சித்திரத்தை எண்ணியோ பதுமையை எண்ணியோ என்பதை விளக்கவில்லை; மண், மலை (கல்), மரம் முதலியன சாதாரணமாய்ப் பதுமைகளைக் குறிக்கும்; "எழுதுதல்" என்பது சித்திரத்தைக் குறிக்கின்றது. இது நிற்க:

இந்தியாவிலே மிகப் பழைய காலத்தொட்டே சித்திரம் எழுதும் வித்தை தெரிந்திருந்தது என்பதை, சில குகைகளிலுள்ள பழைய சித்திரங்களும், ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலுமுள்ள பழைய நூல்களும் தெளிவாய் விளக்குகின்றன. காதலுற்ற ஸ்திரீகள் தம் காதலரின் உருவத்தை எழுதுவதுண்டென்றும், இராவணனது சித்திரத்தைச் சீதை எழுதிக் காட்டினளென்றும், சுயம் வரங்களுக்குமுன், இராஜகுமாரர் இராஜகுமாரிகளின் படங்களை வரைந்தனுப்பும் வழக்கமுண்டென்றும் கூறும் கதைகளும், "மடலெழுதியூர்தல்" என்னும் பழந்தமிழ் மரபும், இன்னும் இவைபோன்ற பலவும், இதற்கு அத்தாட்சிகளாகும்.

"ஒளியகுரிசில் பின் யாவர் எதிலர்?
• • • தெய்வமாகவர்
ஓவியம் ஒழிந்தன உயிர் இலாமையால்'!

என்று கம்பர் அருளிச்செய்திருப்பது, வீட்டுச் சுவர்களில் சித்திர மெழுதும் வழக்கத்தைக் குறிக்கின்றது. "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை" என்றும், "ஓவியத்தெழுத ஒண்ணு உருவத்தாய்" என்றும், "மிக விளங்கோவியர் எழுத வெள்கிய திரிபங்கி" என்றும் வரும் உரைகளையும், இவைபோன்ற வேறு பல உரைகளையும் நோக்குக.

இக்காலத்திலே தென்னாட்டிலே 'சித்திரம்' என்றால ராஜாரவிவர்மாவின் படங்களே முதல் முதல் ஞாபகத்துக்கு வரும். மொகலாய சக்கரவர்த்திகள் காலத்திலே சித்திரக்கலை யுற்றிருந்த மேன்மையையும், ஹிந்துக்களின் ஓவியக்கலை அதனால் மாறுபட்ட வழி வகைகளையும், தென்னாட்டார் அதிகம் அறியார். தென்னாட்டிலே மற்ற விடங்களில் விட மலையாளப் பிரதேசத்திலே தான் இக்கலை அதிகம் பயின்று பாராட்டப்பட்டு வருகிறது. மலையாளத்திலே சில வீட்டுச் சுவர்களில் மிக அழகிய சித்திரங்களைக் காணலாம். பிலாந்தோள் என்னும் ஊரிலே ஓர் எம்பிராந்திரி வீட்டிலே முசாபரி தங்கச் சென்றபோது, வீட்டு வாசலின் அருகே ஒரு நாயர்ஸ்திரீ நிற்பதைக் கண்டு சிறிது திகைத்துநின்று, பின்பால் ஒருசித்திரமே அது என்றறிந்து உட்சென்றது இந்தச்சமயத்தில் ஞாபகத்திற்கு வருகின்றது.

இலக்கியத்திற் போலவே சிற்பத்திலும், இரண்டு பெரும் பிரிவுகளுண்டு. உள்ளதை உள்ளபடி கண்ணாடி போலக் காட்டுவதொன்று, மனோரதம் மனோபாவனைகளின்படி கூட்டியும் குறைத்தும் மாற்றியும் காட்டுவதொன்று. இவ்விரு முறைகளின் தனித்தனிச் சிறப்பையும், இவற்றை ஒருவாறு சமரசப்படுத்தி, உண்மையோடு பொருந்தியும் பொருந்தாமலும் புனையும் முறையின் மேன்மையையும் பற்றி அபிப்பிராய பேதங்கள் பல.

# மதிப்புரை.

16. நவமணி—ஒரு துப்பறியும் நாவல். விலை ரூ. 1.

17. ரமணன்—ஒரு புராணக் கதை. விலை 0-2-0.

18. கலியுக கஜேந்திர மோக்ஷம்—ஓர் நவீனோபாக்கியானம் விலை 0-2-0.

ஸ்ரீ P. S. நீலகண்டன் இயற்றிய 17, 18-வது நூல்களையும் ஸ்ரீ பாஸ்கர என். நாராயணய்யா, பி. எ., பி. எல்., எல். டி. இயற்றிய 19-வது நூலையும் அனுப்பியவர்க்குப் பத்திராதிபரின் வந்தனங்களுரியன.

20. சத்தியார்த்தப் பிரகாசம்—(முதற்பாகம். ஆசிரியர்-சுவாமி தயானந்த ஸரஸ்வதி மொழிபெயர்ப்பாசிரியர் ஸ்ரீ M. R. ஜம்புநாதையர்-விலை ரூ. 2-0-0; ஆரிய புத்தகாலயம், 14, பள்ளியப்பன் தெரு, சௌகார்ப்பேட்டை, சென்னை) ஆரிய ஸமாஜ ஸ்தாபகரான ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதியின் அடிப்படைக் கொள்கைகள் அடங்கிய அரிய பெரிய நூலின் முதல் பத்து அத்தியாயங்களின் தமிழ் மொழி பெயர்ப்பிது. வேத வாக்கியங்களும் முக்கியமாய் மனுஸ்மிருதி வாக்கியங்களுமே, தயானந்தரால், தன் சித்தாந்தங்களை நிரூபிதது நிலைநாட்ட, கையாளப்பட்டிருக்கின்றன; எனினும், வைதிக பண்டிதர்கள் பலர் இந்த வாக்கியங்களுக்கு தயானந்தர் செய்துள்ள வியாக்கியானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மெய். ஸ்வாமி தயானந்தர், இங்கிலீஷே படியாதவர், மேனாட்டுக் கல்விப் பயிற்சி, நாகரிகப்பயிற்சிகளே இல்லாதவரா யிருந்தும், ஹிந்துக்களின் வர்ணாசிரம தர்மங்களையும் ஆசார அநுஷ்டானங்களையும் பற்றி அவர் கொண்டுள்ள அபிப்பிராயங்கள், அவருடைய புத்தியின் கூரிய நுட்பத்தையும், மனோ விலாசத்தையும், தீர்க்காலோசனையையும், தேசபக்தியையும், தைரியத்தை யும் நன்கு விளக்குவன. இந்தப் பத்து அத்தியாயங்களிலும் (1) ஈசுவரனுடைய ஓங்காராதி நாமங்களின் விளக்கம் (2) குடும்பக் கல்வி (3) கல்வி முறை (4) கிரகஸ்தா சிரமம் (5) வானப் பிரஸ்த சன்னியாசாசிரம விதிகள் (6) இராஜ தர்மம் (7) கடவுளும் வேதமும் (8) ஜகத்தின் சிருஷ்டி ஸ்திதிஸம்ஹாரம் (9) வித்தை-அவித்தை; பந்தம்-மோக்ஷம் (10) ஆசார, ஆசாரவிதி விலக்குக்கள், இவற்றைப் பற்றி மிகவு விஸ்தாரமாகத் தம் அபிப்பிராயங்களை, மேற் கோள்களுடன், எடுத்து விளக்கியிருக்கிறார். உதாரணங்களாக "குடும்பக் கல்வி"யின் கீழ் கர்ப்பாதான காலம், பிரசவம, இரசாயனம், முதலிய விஷயங்களையும்; எட்டாவது அத்தியாயத்தில் புத்தர்கள் ஜைனர்களைப் பற்றியும கூறியிருக்கிறார் எனின், அத்தியாயத் தலைப்புக்களுக்குள் அடங்காமல், இந்நூலில், இவர் சித்தி விருத்தி எவ்வளவு விரிந்து பரந்து வியாபித்திருக்கிற தென்பது ஒரு வாறு விளங்கும். இக்காலத்துச் சாமானிய ஜனங்களுக்கு வைதீக தருமங்களையும் நியாயங்களையும பற்றியுள்ள அபிப்பிராயங்களுக்கும், தயானந்தரின்

அபிப்பிராயங்களுக்கு முள்ள வித்தியாசத்துக்கு உதாரணங்களாக, ஸ்வாமிகளின் அபிப்பிராயத்தில், வேதவாக்குப்படி, ஸ்திரீ புருஷர் (ஒன்றின்பின் ஒன்றாக) பதினொரு முறை நியோக விவாகஞ்செய்து கொள்ளலாம் ; 24 வயதுக் கன்னிகைக்கும் 48 வயதுப் புருஷனுக்கும் நடக்கும் பிரதம விவாகமே உத்தமமான தென்பதையும் ; சூத்திரனாய்ப் பிறந்தவன், குணம் கர்மங்களினால் பிராமணனை ஒத்திருந்தால், அவன் பிராமண னாகிறான் என்பதையும் எடுத்தோதுதல் பொருந்தும். இவற்றைக் கொண்டு, மற்ற விஷயங்களில் ஸ்வாமிகளின் கொள்கைகளை அறிய, வாசகர்கள் விரும்புவரென்று எண்ணுகிறேன். ஆரிய ஸமாஜக் கொள்கைகளை நன்கறியாத தமிழர்களுக்கு, இந்நூலை மொழி பெயர்த்தளித்தது பேருபகாரமாகும். நூலின் மூலபாஷையை அறியாத நான், மொழி பெயர்ப்பின் நேர்மையை மதிப்பிட அருகனல்லேன் ஆயினும், அடுத்த பாகத்திலும், இப்பாகத்தின் இரண்டாவது பதிப்பிலும், அச்சுப் பிழைகள் இத்தனையிராது விலக்கிக் காத்தல் அவசியமென்று கூறுதல், தவறாகாது. வைதிக மதத்தைப் புகழ்வோரும் இகழ்வோரும், எல்லாச சாதியினரும், தமிழறிவாளர் அனைவரும் இந்நூலை வாங்கி வாசித்து, ஸ்வாமி தயானந்தரின் கோட்பாடுகளைப் பற்றிச் சிந்தித்தல் அவசியம். மா

சுதேசமித்திரன் பிராஞ்சுபிரஸ், மௌண்ட்ரோட் சென்னை.